பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 14 | வியாழக்கிழமை | (26-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 69




# கூட்டமைப்பினர் வன்னியில் கூடி தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பு

## தமிழ்ச்செல்வன்,பரா,இளம்பரிதி பங்கேற்பு

(கிளிநொச்சி)

**தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சியின் முக்கிய பிரமுகர்கள் நேற்று கிளிநொச்சியில் ஒன்று கூடி கலந்துரையாடி அதனை அமைப்பது குறித்து ஆராய்ந்தனர்.**

தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பது தொடர்பான ஆராய்வுக் கூட்டம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவச் செயலகத்தில் நேற்று முற்பகல் 11.00மணிக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் ஆரம்பமாகி இரவுவரை தொடர்ந்து நடைபெற்றது.

இவ் விஞ்ஞாபனத்தை அமைப்பது குறித்து, கூட்டமைப்பைச் சேர்ந்த இரா.சம்பந்தன், மாவை. சேனாதிராஜா, ஸ்ரீகாந்தா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும், விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும் கலந்து கொண்டு ஆராய்ந்தனர்.

இனமும் தேர்தல் விஞ்ஞாபனம் முழுமையடையாத நிலையில் தமிழ் பேசும் மக்களின் தாயகம், தேசியம், சுய நிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேர்தல் விஞ்ஞாபனம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதி மற்றும் கொள்கையில் எவ்விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது குறித்து நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டது.

எனினும் அது முழுமையடையாத நிலையில் மீண்டும் கூடி ஆராய்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியிடப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை சரியாக கையாளும் பொறுப்பு புலிகளுக்கே உண்டு

## யாழ்.வந்த அமெ.பிரதிநிதிகள் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய தேவைகளையும், பிரச்சினைகளையும் சரியான முறையில் கையாள வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுடைய கைகளிலேயே உள்ளது என அமெரிக்காவின் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்த இவ் அமைப்பின் ஆசியப் பிராந்திய நடவடிக்கைகளுக்கான பொறுப்பதிகாரி தேமுத்றஜான், இலங்கைக்கான வெளிக்கள உத்தியோகத்தர் வில்லியம் ஹொன்கிளின் ஆகியோர் யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் சுபரமநாதன் தமிழராசியர் சங்க யாழ்.மாவட்ட செயலாளர் த.பஞ்சலிங்கம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், போராசிரியர் அ.சண்முகதாஸ் உட்பட்ட பிரமுகர்களை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய அரசியல், சமூக, பொருளாதார நிலைப்பாடுகள் தொடர்பாக இப் பிரமுகர்களிடம் கேட்டறிந்த பின் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் கருத்துக் கூறுகையில், அரசு-புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் யுத்தம் ஓய்வடைந்துள்ளது. இது சகலராலும் வரவேற்கத்தக்க விடயம். இந்த யுத்தநிறுத்தம் மூலம் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா முழு ஆதரவையும் வழங்கும்.

இன்றைய இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டை எண்ணிப் பார்க்கும் போது மிகவும் கவலை ஏற்படுகிறது. இன்றைய் பெரும்பாண்மை இன அரசியல் தலைமை

(10ம் பக்கம் பார்க்க)

## வாஷிங்டன் மாநாடு குறித்து நோர்வேத் தூதுவர் விளக்கம்

**வாக்குச் சாவடி அமைப்பது குறித்தும் ஆராய்வு**


(கிளிநொச்சி)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்றைய சந்திப்பில வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு

(10ம் பக்கம் பார்க்க)





*பீடாதிபதி வீட்டில் இடம்பெற்ற அச்சுறுத்தலைக் கண்டித்து*

## யாழ்.பல்கலைக் கழகத்தில் நாளை வேலை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி கே. சிவபாலன் அவர்களின் வீட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற இனந்தெரியாதோரின் அச்சுறுத்தல் நடவடிக்கையைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நாளை ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்த ஆசிரியர் சங்கப் பொதுச் சபை பல்கலைக் கழக சமூகத்தைச் சார்ந்த எவர் மீதும் இதகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் அதனைக் கண்டிக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு பல்கலைக்கழக சமூகத்தின் ஏனைய சங்கங்களின் ஆதரைவைக் கோருவதெனவும் முடிபு செய்துள்ளது.

இதேவேளை கடந்த 19ம் திகதி இரவு மருத்துவ பீடாதிபதியின் வீட்டிற்கு வெள்ளை வானில் சென்ற இனந்தெரியாத கும்பல் அவரது மனைவியையும் மகளையும் பீடாதிபதி எங்கே என்று கேட்டு மிரட்டி அச்சுறுத்தியமை தெரிந்ததே. (இ-19)

## பத்திரிகையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுத்தேர்தல் நிலைப்பாடு தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இன்று பிற்பகல் 4.00 மணிக்கு 407, ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்சியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல் இதில் கலந்து கொண்டு தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கவுள்ளார். (உ)

எமது நிலம் எமக்கு வேண்டும்
எமது நிலமே எமக்கு வேண்டும்
தமிழ் தேசிய ஒற்றுமையை மீண்டும் வெளிப்படுத்த
நாம் அனைவரும் ஏப்ரல் 2இல் வாக்களிப்போம்
(8502)
யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்

**தமிழீழத் தேசிய விளையாட்டுவிழாவின் ஆறாம் நாள் நிகழ்வுகள்**

# அரை இறுதிப் போட்டியில் யாழ். அணி

# வவுனியா கிரி. அணியை வென்றது

தமிமீழ தேசிய விளையாட்டு விழாவின் 6ஆம் நாள் நேற்றுக் காலை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் தமிழீழத் தேசியக்கொடியெற்றத்துடன் ஆரமபமானது நேற்று மாலை யாழ். வவுனியா அணிகளுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் யாழ்.அணி 5விக்கெற்றுக்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய 30 ஓவர் முடிவில் 9விக்கெற் இழப்பிற்கு 145ஓட்டங்களைப் பெற்றனா். இதில் றொபின்சன் 5சிக்சர் அடங்கலாக 38ஓட்டங்களையும் வினோத்குமார் 5 பவுண்டறிகளை 32ஓட்டங்களையும் பெற்றனா். பநதுவீச்சில் றோபேசன் 4விக்கெற்றுக்களை சாள்ஸ் 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.அணியினா் 28ஓவா் முடிவிலே 148ஓட்டங்களைப் பெற்று 5விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றனர். இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சிவராசா நெடுநேரம் துடுப்பொடுத்தாடி 7பவுண்டரிகள் அடங்கலாக 51ஓட்டங்களைப் பெற்று யாழ். அணியின் வெற்றியை நிச்சயித்தார். பந்துவீச்சில் முகுந்தன் 2 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். நடுவர்களாக கிருபா, முருகவேள், செல்வராசா ஆகியோர் கடமையாற்றினர். நாளை நடைபெறும் அம்பாறை மட்டக்களப்பு அணிகளுக்கிடையிலான போட்டியில் தெரிவாகும் அணியோடு எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாண அணி இறுதிப் போட்டியில் மோதும்.

**திருமலை அணி வெற்றி**

நேற்றுககாலை நடந்த பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் மன்னார் அணியை திருமலை அணி 3 நேர்செற்களில் தோற்கடித்து லெப்ரினன் சதா நினைவுக்கேடயத்தை சுவீகரித்தது. இப்போட்டிக்கு சேரன் வாணிபம் அனுசரணை வழங்கினர்.

**அரையிறுதி முடிவுகள**

நேற்றுக்காலை நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு, பெண்களுக்கான கபடிப்போட்டியில் மட்டக்களப்பு அணி கிளிநொச்சி அணியை 29-15 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்ததது. வவுனயிா அணியினா் முல்லைத்தீவு அணியினரை 32-13என்ற எண்ணிக்கை அடிப்படையில் தோற்கடித்தனர்.

ஆண்களுக்கான கபடிப்போட்டியில் வவுனயிா அணியினா் அம்பாறை அணியினரை 56-19என்ற எண்ணிக்கை அடிப்படையில் தோற்கடித்தனர். யாழ்.அணியினா் மன்னாா் அணியினரை 36-9என்ற புள்ளழி அடிப்படையில் தோற்கடித்தனர்.

**மன்னார்-வவுனியா இறுதிப் போட்டியில்**

நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் வவுனியா அணி திருகோணமலை அணியை 1-0 என்ற அடிப்படையில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இதேவேளை, இதேகோல் கணக்கில் யாழ்ப்பாண அணியை தோற்கடித்த மன்னார் அணியினா் வவுனியா அணியினரோடு எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு இறுதிப் போட்டியில் மோதுவா். இதுவே இவ் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்ச்சியுமாகும் என்பது குறிப்பிடத்தக்

**19 வயதுக்குட்பட்டோருக்கான**

# உலகக் கிண்ண கிரி.போட்டியில்

# இலங்கை, இந்திய அணிகள் வெற்றி

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெற் தொடரில் மூன்றாவது சுப்பா் லீக் போட்டியில் விளையாடும் இலங்கையணி தென்னாபிரிக்க அணியை 29ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது.

டாக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50ஓவர்கள் முடிவில் 5விக்கெற்றினை இழந்து 277ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி சார்பில் துடுப்பாட்ட வீரர்களான டபிள்யூ.சரங்க 117 ஓட்டங்களையும் இந்டின் நாகில 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் அஸ்திகா 49 ஓட்டங்களுக்கு 3விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 48,3ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 248ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜே.சொய்ஸன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 120ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இலங்கையணி சார்பாக மஹ்ரூப் 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களையும், சாணக மற்றும் சுறாச் ஆகியோர் தலா இரண்டு விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர். (யே-121)




# பிரித்தானிய நம்பிக்கை நட்சத்திரம்

# டோவின் சேம்பர்சுக்குத் தடை

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பாவித்திருந்தார் என்ற குற்றச்சாட்டுத்தொடர்பான விசாரணைகளின் முடிவில் பிரித்தானியாவின் 100மீ. சம்பியன் டோவின் சேம்பர்சுக்கு 2வருடத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது, ஐரோப்பிய 100மீற்றர் சம்பியனான சேம்பர் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துகள் பாவித்தது தொடர்பில் கடந்த வருடம் ஓகஸ்ட்மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை மெய்வல்லுநர் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அவர் தொடர்ந்தும் இவ்விடயம் தொடர்பில் தான் குற்றமற்றவர் என்றே வாதிட்டு வந்தார். ஆயினும் மருத்துவச் சோதனைகளில் அவர் குற்றவாளியாக காணப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டு வருடத்தடையும் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தடையும் விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும், இததீர்ப்பை எதிர்த்து 60 நாட்களுக்குள் அவர் மேன்முறையீடு செய்யமுடியும் என்று அவரது சட்டத்தரணிகள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக விசாரணைகளின் போது சேமபர்ஸ் நீதிபதியின் முன்னால் கண்ணீர் சிந்தி அழுதார். தனது அறிவுக்கெட்டிய வகையில்தான் இவ்வாறான எவ்வித நடவடிககைகளிலும் ஈடுபடவில்லை என்றும் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து அவரது பயிற்றுவிப்பாளர் றெமி கொச்செம்னி தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 2002ஆம் ஆண்டு 9.87விநாடிகளில் 100மீற்றரைக்கடந்து ஐரோப்பியச் சம்பியன் பட்டத்தை வென்ற 25வயதான டோவின் சேம்பர்ஸ், 1999ஆம வருடம் உலக மெய்வல்லுநர் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்ற போது அவருக்கு வயது 22.

இக்காலத்திலதான் அவர் பிரித்தானியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகயொலிக்க ஆரம்பித்தார். தற்பொழுது விதிக்கப்பட்டிருக்கும் தடை மேன்முறையீட்டிலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிக் கனவுகள் சேம்பாஷுக்கு சிதறிப் போகும் என்பதில் ஐயமில்லை. (யே)

# உடல் நலத் தகுதியை

# கைவ் உறுதி செய்தார்

இந்திய கிரிக்கெற் அணியின் மத்தியதர ஆட்டக்காரர் முஹம்மது கைவ் அடுத்தமாதம் இடம் பெறவுள்ள பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் பங்கேற்பதற்கான பூரண உடல்நலத் தகுதியைப் பெற்றுள்ளதாக அறிவிககப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற 'ஏ' அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் தொடரின் போது பெருவிரலில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக அவுஸ்திரேலிய முக்கோணத் தொடரில் கைவ் கலந்துகொள்ளவில்லை என்பது தெரிந்ததே.

இது தொடர்பாக கைவ் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் இபபொழுது பூரண உடல் நலத்தகுதியைப் பெற்றுள்ளேன் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் நான் கடந்த இரண்டு தினங்களாக பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன். இப்பயிற்சிகளின் போது பிரச்சினைகளை எதி கொள்ளவில்லை. என்னால் சிறப்பாக இனி மேல் விளையாட முடியும் என்று தெரிவித்துள்ளார். (யே-121)

**உதை பந்தாட்டம்**

# பிறீமியர் லீக் போட்டிகளில

# ஐரோப்பிய ஜாம்பவான்கள்

(மெஸ்கோ)

தற்பொழுது ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் ஐரோப்பாவின் மிகப் பிரபலமான அணிகள் மோதுகின்றன. மிக விறு விறுப்பாக நடைபெற்றுவரும் இப் போட்டிகளி[ல்] உலகின் பல நட்சத்திர அந்தஸதைப் பெற்ற வீரர்கள் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது. (யே)



எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட தவறினால் றியல் மற்றிட் அணி போட்டியைச் சமன் செய்வதற்கு தான் பிடிக்கத்தவிறய கோல்தாே காரணம் என்று வெதும்பும் "மூனிச்" கோல் கீப்பர் ஒலிவர் கான்.



"மூனிச" அணியுடன் சமன் செய்த களிப்பில் றியல் மற்றிட் அணியினர்.



ஆஷனல் கழகத்திற்காகக் கோல் போடும் எடு.



"செல்ரா லியோ" அணியினர் மோதும் காட்சி.



"பரகுவேயின்" லூக்காஸ் ஸெலொன்காவிடம் பந்தைக் கைப்பற்ற முயலும் "ஏசிமிலான்" வீர் கிளாரன்ஸ் சீடோவ்.



ஆஷனல் கழகத்திற்காகக் கோல்போடும் றொபேட் பியர்ஸ்.




லொக்கோ மோட்டிவ் அணியினரும் மொனோக்கோ அணியினரும் உக்கிரமாக மோதும் காட்சி



'லொக்கொ மோட்டிவ் மொஸ்கோ' அணியினர் வெற்றிக் களிப்பில்!



பிரான்சின் நட்சத்திர ஆட்டக்காரரும் றியல் மற்றிட் கழகத்தின் முன்னணி வீரருமான சினேடின் சிடேன்.



2 வது கோல் போட்ட மகிழ்ச்சியில் ஆஷனல் அணியின் வீரர் எடு.



லொக்கொமோட்டிவ் அணியின் விளாடிமிர் மமிநொவ், மிக்காயில் அஸ்ரியானியால் வாழ்த்தப் படுகிறார். மொனக்கோ அணிக்கெதிராக இவர் 2 கோல்களைப் போட்டு அணியை வெற்றிபெறச் செய்தார்.

# பொங்கு தமிழ் கோஷம் முழங்க பொதுத் தேர்தல் திருவிழா

## விரிவான, விரைவான ஏற்பாடுகளில் கூட்டமைப்பு

**எதிர்வரும் பொதுத்தேர்தலை தேர்தல் பெருவிழாவாக எதிர் கொள்வதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.**

**தமிழ் தேசியக் கூட்ட மைப்பினருக்கும் அவர்களுக்கு எதிராகப் போட்டியிட வுள்ள ஏனைய கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்குமிடையேயான ஓர் பலப்பரீட்சையாகவே இத்தேர்தல் அமையவுள்ள நிலையில் கூட்டமைப்பினர் இத்தகைய பெருமெடுப்பிலான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.**

**"எமது நிலம் எமக்கு வேண்டும், நாம் எம் ஊருக்குப் போகப் படையினரே உங்கள் உருக்குப் போங்கள், உயர்ந்தவர்கள் நாமெல்லாம் உலகத்தாய் வயிற்று மைந்தர், பணிந்து இனி போகமாட்டோம் நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்" என்ற பொங்கு தமிழ் கோஷங்களுடன் கூட்டமைப்பின் தேர்தல் திருவிழா யாழ். குடாநாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

★ தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்.

★ தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்த பேச்சுக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மட்டுமே நடத்தப்படவேண்டும்.

★ இடைக்கால தன்னாட்சி அதிகார சபை விடுதலைப் புலிகளின் கையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

★ இடை நிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்கள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப் படையில் தொடரப்படவேண்டும்.

★ இராணுவ நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இயல்பு வாழ்வு திருப்பப்பட வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கை அடிப்படையில் இத்தேர்தல் களத்தில் கூட்டமைப்பினர் குதித்துள்ளனர்.

தமது இந்த நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் முதலாவது கூட்டத்தை நேற்று முன்தினம் மாலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தினர்.

அங்கு அபேட்சகர்கள் முழங்கிய வார்த்தைகளை இங்கே விளம்புகின்றோம்.

### மாவை சேனாதிராஜா



சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்து வதற்கும் தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் தயாராகவே உள்ளனர். இதனை எதிர்வரும பொதுத்தேர்தல் ஊடாக உலகிற்கு உணர்த்தப்போகிறோம்.

கடந்த காலங்களில் ஜனநாயக வழியில் செயற்பட்டுத்தோல்வி கண்ட தமிழினம் தனது ஆயுதப் பலத்தினால் தனது இருப்பினை உறுதி செய்த பின்னர் மீண்டும் ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளது.

இந்நிலையில் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் விடுதலைப்புலிகளின் முழு ஆதரவுடன் தேர்தலை எதிர் கொள்கின்றனர்.

தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையிலான இத் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்று பட்டு ஓரணியில் செயற்பட வேண்டும். இது தொடர்பில் தமிழ் மக்களின் எதிர் காலம் கருதி 3 முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய அறிக்கைகளை வெளியிட வுள்ளோம் . நாம் நம்பகரமானதும் நிறைவேற்றக்கூடியதுமான வாக்குறுதிகளையே மக்களுக்கு வழங்குவோம். பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்ற மாட்டோம். எதிர்காலத்தில் மக்களுடன் சிறந்த தொடர்பு கொண்டவர்களாகவே அரசியல் நடத்த

### எம்.கே. சிவாஜிலிங்கம்



தமிழ் மக்களுக்குச் சம நீதியை வழங்காத இலங்கையின் அரசியல் அமைப்பை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இதனை பொதுத் தேர்தல் ஊடாக நாம் மீண்டும் வலியுறுத்துவோம்.

இலங்கையில் அழுகல் அரசியல் அமைப்பினால் நாம் பல தடவைகள் மோசம செய்யப்பட்டோம்.

இதனை அகிம்சை வழியில் தட்டிக் கேட்டபோதெல்லாம் எம் மீது இனவாதிகள் வன்முறைகளைத் திணித்தார்கள். இதன் விளைவாக ஆயுத பலத்தினால் எம் இனத்தின் இருப்பை வலுப் படுத்தி பல வெற்றிகளைக் குவித்ததால் எம் தனி நாட்டு இலட்சியத்தை அடைவதற்கான சந்தர்ப்பம் உருவானது.

இதனைக் கண்டு மிரண்ட சிங்களதேசம் எம்மை பேச்சு மேசைக்கு அழைத்தது. இது தொடபில் சர்வதே அழுத்தமும் பலமாக எம் மீது பிரயோகிக்கப்பட்டது. இதனால் எமது தனி நாட்டு இலட்சியத்திற்கு மாற்று வடிவம் கொடுத்து இணைப்பாட்சி என்ற கோரிக்கையுடன் பேச்சு மேசைக்குச் சென்றுள்ளோம்.

**தொகுப்பு: க. பவன்**

இந்த எமது நிலைப்பாடு வெற்றி பெறவேண்டும் என்ப தற்காகவே விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலைக் கூட்டாகச் சந்திக்க வுள்ளோம்.எமது இந்தக் கூட்டு ஒற்றுமைக்குப் பூட்டுப் போடும் விதமாகவே வீ.ஆனந்தசங்கரி எதிர்வரும் பொதுத் தேர்தலில் பூட்டுச் சின்னத்தில் போட்டியிட வுள்ளார்.இந்தப் பூட்டுச் சின்னத்தை தமிழ் மக்களின் அடிமைச் சங்கிலியை இறுக்கப் பூட்டும் பொருள் கொண்டதாகவே நாம் கருதுகிறோம். தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குப் புறம்பாகப் போட்டியிடும் சங்கரியை நாம் ஒருபோதும் ஏற்கத் தயாராக வில்லை.

நாம் இந்தத் தோர்தல் மூலம் ஜனநாயக ரீதியாக வலியுறுத்த வுள்ள சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் சாசனத்தின்படி பிரிந்து சென்று தனிநாடு அமைக்க நாம் தயாராகவுள்ளோம்.

எமது வீடுகளில் நாம் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகவே நாம் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிறோம் .

### சீ. வீ. கே. சிவஞானம்

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கத் தகுதியுடையவர்கள் என்ற கருத்தை இந்தத் தேர்தல் ஊடாக வலியுறுத்துவோம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக் காலகட்டத்தில் இந்தப் பொதுத் தேர்தல் இடம் பெறவுள்ளது. இந்தத் தேர்தல் ஊடாக உலகம் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் உணர்வுகளையும் கணிப்பீடுசெய்யவுள்ளது.

இதனால் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தகுதியுடையவர்கள் என்பதையும், தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத சக்திகள் என்பதையும் உணர்த்த வுள்ளோம்.



அனுசரணையுடன் கூட்ட மைப்பு இத் தேர்தலுக்கு முகம் கொடுக்கிறது. இதனால் யார் அரசியலுக்கு வந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுக்கள் தொடரப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவோம். இதனை ஏற்கும் கட்சிக்கே எமது முழு ஆதரவையும் வழங்குவோம்.

### சுரேஸ பிரேமச்சந்திரன்

எமது ஆயுதப் போராட்டம் பெற்றுத் தந்த வெற்றியை விடுதலையாக மாற்றுவதற்கான ஊடகமாகவே எதிர்வரும் பொதுத் தேர்தல் எம்மால் பயன்படுத்தப்படும்.

எமது விடுதலை வேட்கையை வென்றெடுக்க மூன்று வழிகள் உண்டு.இதில் முதற் கட்டமான ஆயுத வழியில் வெற்றிகண்டு எமது இருப்பினை உலகறியச் செய்துவிட்டோம்.

இதனால் எஞ்சியிருக்கும் அரசியல்வழி, இராஜதந்திர வழி ஆகியவற்றில் நாம் வெற்றி பெற வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இதில் இராஜதந்திர ரீதியான நகர்வை விடுதலைப்புலிகள் மிக நுணுக்கமாக நகர்த்திவந்தாலும் அரசியல் நகர்வில் ஒருபங்கை கூட்டமைப்பினரது கையில் தந்துள்ளனர்.

இதனால் கூட்டமைப்பினர் இந்தத் தேர்தலை எமது விடுதலை வேட்கையை உலகறியச் செய்யும் களமாகவே பயன்படுத்துவர். இதற்கு மக்கள் தமது முழு ஆதரவையும் தந்தால் தமிழரது பலம் அசைக்கமுடியாதவொன்றாகிவிடும்.



அடுத்து ஆட்சி அமைக்கவுள்ள அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. தற்போதைய சர்வதேசச் சூழ்நிலை மீண்டுமொரு யுத்தத்தை உருவாக்காது என்ற நம்பிக்கையுள்ளது.எனினும், இனவாதிகள் தமது பொய்ப்பிரசாரங்கள் ஊடாக உலகை ஏமாற்றி எம் மீது மீண்டுமொரு யுத்தத்தைத் திணிக்கலாம்.இவ்வாறு யுத்தத் திணிப்புத் தவிர்க்கப்பட கூட்டமைப்பின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் அதிகரிக்கப்படல் அவசியம்.

இத்தனை கருமங்களையும் செய்து எமது போராட்டத்தை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தி தமிழரது சுயநிர்ணயக் கோரிக்கைகளை வென்றெடுப்பதே எமது நோக்கம்.

### பத்மினி சிதம்பரநாதன்



பல்லாயிரக்கணக்கான பெண்களை அசியல் ரீதியில் எழுச்சிப் படுத்துவதுடன் தமிழ் பெண்களின் அரசியல் உரிமைகளை வலுப் படுத்தும் ஓர் களமாகவே இத் தேர்தலை எதிர்கொள்கிறேன்.

பெண்கள் சார்பாக நான் அரசியலில் வெல்வது என்பதைவிட பெண்களும் விடுதலைவேட்கையுடன் வாழ்கிறார்கள்.

என்பதை வலி யுறுத்துவது எமது முழு இலட்சியம். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 3இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண் வாக்காளர்கள் தமது வாக்கினைச் சரிவரப்பயன் படுத்தி தமிழ் இனத் தின் ஒற்று மையைப் [illegible] பெண்களின்

### க.கஜேந்திரன்



அரசியல் விழிப் புணர்வையும் வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ் இனத்தை விற்றுப் பிழைக்கும் தேசத் துரோகிகள் தேர்தலில் வெற்றிபெற்று பாராளு மன்றக் கதிரைகளில் குந்தக் கூடாது என்பதுவே நாம் தேர்தலில் போட்டியிடக்காரணம்.

தமிழ் மக்களுக்காகப் பல தியா கங்களையும் செய்யும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறும் ஆனந்த சங்கரியினதும் டக்கிளஸ் தேவானந்தாவினதும் அரசியல் நாடகங்களுக்கு முடிவு கட்டவேண்டும். இதனை நோக்காகக் கொண்டு தேர்தலில் போட்டியிடும் நாம் வெறுமனவே பாராளுமன்றக் கதிரைகளை நிரப்புவதை நோக்காகக் கொண்டிருக்கக் கூடாது. எம்மை நம்பி தமது வாக்குகளைத் தரும் மக்களின் கட்டளையையே நிறைவேற்ற வேண்டும்.

புலிகளைத் தமிழ்மக்கள் ஆதரிக்கின்றனரா என்பதை உலகம் உன்னிப்பாகக் கவனிக்கும் தேர்தல் இது. இதனால் தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் விடுதலைப்புலிகள் மக்களால் ஆதரிக்கப்படுகின்றனர் என்பதை உலகறியச் செய்யவேண்டும்.

1977ஆம் ஆண்டிலிருந்து தேர்தலைப் பகிஷ்கரித்து வந்த நாம் இன்று தேர்தலில் போட்டியிடுகிறோம் என்றால் இது காலத்தின் கட்டளை. தழிழ் மக்களுக்காக புலிகள் எமக்கு ஆதரவு தருகின்றனர். இது இரத்தம் சிந்தாது விடுதலை இலட்சியத்தை அடைய அவர்கள் தேர்ந்து எடுத்த மாற்று வழி.

### மா.கா.ஈழவேந்தன



தமிழ் மக்களுக்காக எதைச் செய்தாலும் அது புலிகளைப் புறக் கணித்துவிட்டுச் செய்துவிட முடியாது என்பதை இனவாதிகளுக்கும் தேசத்துரோகிகளுக்கும் புகட்டவேண்டும் என்பதற்காகவே இந்தத் தேர்தலைக் கூட்டமைப்புக் கூட்டாக எதிர்கொள்கிறது.

விடுதலைப்புலிகளை ஓரம்கட்டிவிட்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் பிரசன்னமாவதற்கு ஆனந்தசங்கரி போன்ற சில அழுகல் அரசியல்வாதிகள் முன்னணியில் நிற்கின்றனர். இவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். இதுவே எமது கூட்டமைப்பின் பிரதான கொள்ளையாகும்.

தான் வாழாவிட்டாலும் இலங்கைத் தமிழன் வாழக் கூடாது என்ற நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது. இதனை மாற்றி தமிழ் மக்கள் தம் நிலைப்பாட்டை உலகறியச் செய்ய வேண்டும். ★

## இன்று ஒரு தகவல்

# நன்றி

ஒரு ஊரில் ஒரு குரு இருந்தார். ஒரு நாள் இரவு ஏதோ ஒரு முக்கியமான புத்தகத்தைக் கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் படித்துக் கொண்டிருந்தது ஒரு ஞான நூல். அதில் ஆழ்ந்து போயிருந்தார் அந்தப் பெரியவர்.

அந்த நேரம்பார்தது ஒரு திருடன் மெதுவாக உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு கத்தி வைத்திருந்தான். அந்த குருவிடம் சென்று அவரை மிரட்டினான். "சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடம் உள்ள பணத்தைக் கொடுத்துவிடு இல்லாவிட்டால் கொன்றுவிடுவேன். பணத்தைக் கொடுக் கின்றாயா அல்லது ஒரே குத்தாகக் குத்தட்டுமா? என்று கேட்டான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார் "இதோ பாரப்பா... எனனைத் தொந்தரவு செய்யாதே... அதோ பார் அந்தமேசை மீது தான் பணம் இருக்கின்றது எடுத்துக் கொள்'' என்று கூறி விட்டு மீண்டும் படிக்க ஆரம்பித்துவிட்டார். அந்தத் திருடன் அவர் கூறியது போலவே மேசையை நோக்கிச் சென்றான். பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே சென்னாா "எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்விடாதே கொஞ்சம் மிச்சம் இருக்கட்டும் நாளைக்குவரி கட்டவேண்டியுள்ளது" என்றார்.

இவரது நிதானம், பதற்றமின்மை, அமைதி எல்லாவற் றையும் பார்த்த அந்தத்திருடனுக்கு மிகுந்த ஆச்சரிய மாகிவிட்டது. இருந்தாலும அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவர் கூறியது போல் கொஞ்சப் பணத்தை மிச்சம் வைத்துவிட்டு மிகுதி முழுவதையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். வெளிவாசலைத் தாண்டினான் அந்த சமயம் அந்தப் பெரியவர் சொன்னார். "எதையார் கொடுத் தாலும் நன்றி கூறவேண் டும் அதுதானே நாகரிகம்" என்றார் திருடன் திகைப்புடன் திரும்பிப்பார்த்தான் "நன்றி" என்று கூறிவிட்டு தன்பாட்டுக்கு போய் மறைந்துவிட்டான்.

சில நாட்கள்கழிந்து அந்தத் திருடன் ஒரு கேஸில் மாட்டிக் கொண்டான். காவல்துறையினர் விசாரித்தனர். பெரியவர் வீட்டில் திருடியதையும் அவன் ஒத்துக் கொண் டான. அந்தப் பெரியவரை சாட்சி கூற அழைத்தனர். அவர் சொன்னார் "என்னைப் பொறுத்தவரை இவன் திருடன் இல்லை. அவ னுக்கு ஏதோ சிரமம அதனால் என்னிடம் வந்தான் பணம் கொடுத்தேன் வாங்கிக் கொண்டுபோனான். அவ்வளவுதான் போகும் போது என்னைப் பார்த்து நன்றி கூறிவிட்டுப் போனான். என்ன நன்றி சொன்னாயா இல்லையா? என்றார் "ஆமாம் சுவாமி-சொன்னேன்!" என்றான் திருடன் ஆச்சரியத்துடன்.

வேறு குற்றங்களுக்காக அவன் சிறைக்குப் போனான். கொஞ்சக்காலம் கழித்து வெளியே வந்தான். வந்தபின் நேராக அந்தப் பெரியவரிடம் சென்றான் "குருவே! என்னை சீடனாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றான். சீடனாகி விட் டான். அந்தக் காலத்தில் இப்படி நல்லவர்களின் நடவடிக்கை களே கெட்டவாகளை திருத்தியது. இந்தக் காலத்தில் இப் படியெல்லாம் நடக்குமா?

இநதக் காலத்து மனிதன் ஒருவன் ஒரு குருநாதனைத தேடிப் போனான். "சுவாமி என்னை உங்களின் சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றான். "நான் யாரையும் சீடனாக ஏற்றுக்கொள்வதில்லை" என்றார் அவர். "ஏன் சுவாமி?" என்று கேட்டான் இவன். "சீடனாக வருபவன் கொஞ்ச நாளில் குருநாதரை விரட்டி விட்டு அவர் ஸ்தானத்தில் உட் கார்ந்து விடுவான் அது தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது என்றார். அது எப்படி சுவாமி அவ்வளவு உறுதிபடக் கூறுகின்றீாகள்? என்றான் இவன். நானே இங்கே அப்படி உட்கார்ந்தவன் தான் என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வன்முறைகளில் ஈடுபடுவோரை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

சகல தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பு மனுத்தாக்கல் நேற்று முன்தினம் நண்பகலுடன் முடிவுற்றது. இதன் பின்னர் நாட்டின் பல்வேறு இடங்களிலும் இடம் பெற்ற தேர்தல் வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர் புடையவர்கள் கைது செய்யப்படுமிடத்து, அவர்கள் அனைவரும் அரசியல் பேதமின்றி விசாரிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி, கல்முனை, அம்பாறை, கேகாலை, நாவலப்பிட்டி, புத்தள ஆகிய பிரதேசங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் யாவும் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து நிலைமை சீரடைந்தது. (தி-61)

# இலங்கையின் இரு பிரதான கட்சிகளின் தேசியப் பட்டியலில் 10 தமிழர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கியதேசியக்கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் தேசியப்பட்டியலில் இடம்பெறும் எம்.பிக்களின் பெயர் விபரங்கள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப்பட்டியலில் 6 தமிழர்கள் உட்பட இடம்பெற்றுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

கே.என். சொக்ஸி,திலக் மாரப்பன, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், டிரோன் பெர்னாண்டோ, நவீன்திஸநாயக்க ஏ.எச். எம். அஸ்வர்,ரொனி டிமெல், எம்.எம். முஸ்தபா அலிஸாகிர் மௌலானா, அஸன் ஸகிலா, இஸ்மாயில்குத்தூஸ்,பாத்திமாகபீர், எஸ். ஏ. பதுர் திஸா, டபிள்யு, பி. புஸ்பகுமார, சி.புத்திரசிகாமணி, எம்.எஸ். செல்லாச்சாமி,பி. ராதகிருஸ்ணன், ஆர். பரமசிவம், டாக்டர் அத்துப்பத்து, சுனில் திஸநாயக்கா, கே. கோ சேனநாயக்க, ஆர்.பத்மநாதன், ரவீந்திர ரத்தேனியா, டாக்டர் ராஜா ஜோன் பிள்ளை,ஸ்ரீ நாடி மெல்,இரத்தின இத்திரானி இதிஸ கொல்ல ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியலில் நான்கு தமிழர்கள் உட்பட இடம்பெற்றுள்ளவர்களின் விபரம் வருமாறு,

லஷ்மன் கதிர்காமர்,பேராசிரியர். எச். வி. சுரவீர, பேராசிரியர் விஸ்வ வர்ணபால, கலாநிதி ரிச்சர்ட் பத்திரன,டி.யு.குணசேகரா, முகமட் தௌன்சேகு இஸ்ஸதீன், எஸ்.அன்வர் இஸ்மாயில், பேராசிரியர் திஸ்ஸ வித்தாரான, ஜீதஅஞ்சன ரூபசிங்க, குண வர்த்தன, ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம்.சுஹைர், இ.சந்திரசேகரன், ஜே.எம். மேரிலுசிடா, அஜித்த டி சொய்ஸா, சு. பத்மசவோசான, எம்.பி.அஸிஸ், எஸ். சுபைர்தீன், சமரகொஸ்வத்த, வர்ண கீர்த்தி ராஜ பக்ஷ, பீரிப் குமாரசிங்க, எம்.எம். வசந்த சமரசிங்க, லீல் குணசேகரா,டாக்டர் எமஜ.எம். முஸின, வி. தங்கராஜா, ஜீ.எல்.பி.ரானிபேரா, சிறில் விக்கிரம கமகே, எஸ்.எட்.டி. வீரசேகர, சலீன் ஜன பத்து, ஜனதாஸ பீரிஸ்,ஜீத்தி சுமணஸ்ரீ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ம)

# தேர்தல் திருவிழாவினால் தேரர்களிடையே முரண்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒரு தொகுதி பிக்குமார் போட்டியிடவிருப்பதை முன்னிட்டு அவர்களுக்கு தலைமை தாங்கும் வண.எல்லாவல மேதானந்த தேரர், அஸ்கிரிய மகா நாயக்க தேரர்களை சந்திக்க விடுத்த கோரிக்கையை மகாநாயக்க தேரர் அதி வண. ரம்புக் வெல ஸ்ரீவிபசி தேரர் நிராகரித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் தாம் போட்டியிட எடுத்த முடிவுபற்றி மகாநாயக்கருக்கு விளக்க இவர்கள் விரும்பி கடந்த ஞாயிறு இரவு 8.00மணியளவில் மகாநாயக்கரை சந்திக்கவென சென்ற இவர்களைப் பார்க்க மகாநாயக்க தேரர் மறுத்து விட்டார்.

பிக்குமார் தேர்தலில் போட்டியிவது தவறானது என அஸ்கிரிய- மல்வத்தை பீடாதிபதிகள் ஒன்றாக அறிக்கைவிடுத்து ஒருசில மணி நேரத்திற்குள்ளாகவே இச் சம்பவம் நடைபெற்றுளளது.

பிக்குமார் தேர்தலில் போட்டியிடுவது பௌத்தர் மத்திற்கு புறம்பானது. இம்முடிவினால் நாம் அதிர்ச் சியடைகிறோம் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், போட்டியிடவுள்ள குருமார் அமரபுர நிக்காயவின் மகாநாயகரான வண. வெலிகம ஞான ரட்ண தேரரிடம் கடந்த திங்களன்று ஆசிகளை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (உ-6)

## இராசி பலன்

26. 02. 2004

(மாசி 14, வியாழக்கிழமை)

| | |
|---|---|
| சஷ்டி | மாலை 6.40 மணி வரை |
| பரணி | முன்னிரவு 9.13மணிவரை |
| இராகுகாலம் | 1.59-3.29 மணிவரை |
| சுபநேரம் | 7.59-9.29 மணிவரை |

சஷ்டி விரதம்

**மேடம்**
கௌரவமான நிலை, தொழில் ஆர்வம், புதிய சிந்தை, புண்ணிய கருமம்.

**இடபம்**
அமைதிக் குறைவு, காரிய அலைச்சல், போசன சுகம், தனவிரயம்.

**மிதுனம்**
எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை.

**கடகம்**
தொழிலில் ஆர்வம், முயற்சி கைகூடும், வாக்குமேன்மை, களஸ்திர நன்மை.

**சிங்கம்**
புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, பிதா சிந்தை, முயற்சி தாமதம்.

**கன்னி**
வேலைக கஷ்டம், மனத்தாங்கல், பிரயாணம், பணத்தட்டுப்பாடு.

**துலாம்**
கௌரவமான நிலை, தடைப்பட்ட காரியம் கைகூடும், கல்வியில் முன்னேற்றம்,தனலாபம்,

**விருச்சிகம்**
ஜனவசியம், நல்ல முயற்சி,விருந்துபசாரம், உடல் நலம்.

**தனுசு**
அதிகபிரயாசை, சொத்துப்பிணக்கு, காரிய தாமதம், திடீர் நன்மை.

**மகரம்**
மாதர் நட்பு, தொழில் சிந்தை, ஆரோக்கியக் குறைவு, மனச்சோர்வு.

**கும்பம**
வாக்குமேன்மை, நினைத்த காரியம் கைகூடும், பணவரவு, கீர்த்தி.

**மீனம்**
தாழ்ந்த சுபாவம், தனவிரயம், காரிய தாமதம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# உள் அழைப்பு இலவசம் கால தாமதமாகும்

(கொழும்பு)

கைத்தொலைபேசிகளுக்கு அழைப்பை ஏற்படுத்துபவரே கட டணம் செலுத்தும் முறை அமு லுக்கு வர இன்னும் ஒருசில நாட்களே உள்ள இவ் வேளை யில், இத்திட்டம் இன்னும் இரு மாதங்களுக்கு பிறபோடப்படவுள்ள தாக தொலைத் தொடர்பு ஒழுங்க மைப்பு ஆணைக்குழுவின் தலை வர் திலக் ரணவிராஜா தெரிவித் துள்ளார்.

இத்திட்டத்தை மார்ச் மாதம் முதலாம் திகதி அமுல்படுத்து வதற்கு ஏன்கனவே முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தி யாஸ் பாக்கீர் மாக்காரிடம் அனு மதி பெற்றிருந்தும் அமைச்சர் களை புதிதாக நியமித்தபின்பு அனுமதியை மீளப்பெறவேண்டி யிருக்கிறது என அவர் தெரிவித்தார். இததிட்டத்தை அமுல்படுத்து வதிலுள்ள சட்டப் பிரச்சினைகள் பற்றி புதிய அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடியுள்ளார் என்றும் ரணவிராஜா கூறியுள்ளார்.

இவ்விடயத்தில் பொதுமக்கள் கருத்துகளும் கவனத்திலெடுக்கப்படும் என தெரிவிக்கப் படுகிறது. இதன்படி கைத்தொலை பேசி களுக்கு அழைப்பு ஏற்படுத்தும் பவர்கள் மேலதிகமாக ரூ.5 செலுத்த வேண்டியிருக்கும். (ந)

# உவர்நீர் உட்புகுவதால் பாழாகும் பயிர் நிலங்கள்

(மருதங்கேணி)

தென்மராட்சி தெற்குப்பகுதியில் உள்ள உவர் நீர் தடுப்பு அணைகள் நீண்டகாலமாக பராமரிப்புக்கள் ஏதுமற்ற நிலையில் காணப்படுவதால் அப் பகுதி விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாறும் அபாயம் தோன்றியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் உவர் நீர் ஏரிக்கும் உவர் நீர் ஓடைகளும் அதிகமாகக் காணப்படுவதால் இவ்வாறான உவர் நீரினை விவசாய நிலங் களுக்குள் சொல்லவிடாது தடுத்து பாரிய அள விலான உவர் நீர்தடுப்பு அணைகள் அமைக் கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

ஆனால் கடந்த கால இராணுவ நடவடிக்கை களின் பின்னர் இப் பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயமாக படையினர் பிரகடனப்படுத்தியுள்ள தால் இங்கு மக்கள் நடமாட்டம் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேற்படி உவர் நீர் தடுப்பு அணைகள் சரிவர பராமரிக் கப்படாது சேதமடைந்து காணப்படுகின்றன.

இதனால் விவசாய நிலங்களுக்குள் உவர் நீர் புகுந்து நீண்ட காலமாக தேங்கி நிற்க வாய்ப்பு உருவாகியுள்ளதுடன் விவசாய நிலங்கள் உவர் நிலமாக மாறி பயிர் செய்ய முடியாத தரிசு நில மாக மாறும் அபாயம் தேன்றியிருப்பதாக விவசா யிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர். (உ-35)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## இரண்டாம் பகுதி

57

### 2 . புத்தள மாவட்டத்துச் சமுதாய நிலைகள்

**(ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்து அதிகாரியின் அறிக்கை ஒன்றில் உள்ள பகுதி)**

**சாண்டார், நளவர்**

சாண்டார் புத்தளத்துப் பூர்வகுடிகளின் வழி முறைச் சந்ததியினராவார். நளவரின் முன்னோர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து காலாகாலமாகப் புத்தளத்திற்கு வந்து சேர்ந்த குடிகளாவர். அவர்களிடையில் இறப்பிறமாதுக் கிறிஸ்தவத் திருச்சபையைச் சேர்ந்தவர்களும் உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவரும் உள்ளனர். அவர்களின் சீவியம் தென்னந் தோப்புகளை அடிப்படையாகக் கொண்டது. கள்ளிறக்குதல் அவர்களின் பிரதானமான தொழிலாகும். தங்களின் சீவியத்திற்காக அவர்கள் மற்றுங் குடியானவரிடமிருந்து தென்னை மரங்களைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்கின்றனர். அவர்களின் பழக்க வழக்கங்கள், வழமைகள் என்பன பற்றி விசேஷமாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை.

**வண்ணார்**

புத்தளத்தில் வண்ணார் அதிகமாகவுள்ளனர். தங்களுடைய பரம்பரை தொழிலை தவிர வேறு ஒரு முயற்சியிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை.அவர்களுள் பெரும்பாலானோர் இந்துக்களாக உள்ளனர். பழக்கவழக்கங்களில் மீனவரைப் பெரிதும் ஒத்துள்ளனர்.

**சாயக்காரர்**

ரெட்டியார்களும் சாயக்காரரும் மிகக் குறைந்த அளவிலே உள்ளனர். சாயமிடுதலே அவர்களின் தொழிலாகும்.

சாயவேர் கிளறும் கடையர் எல்லோரும் இந்துக்களாவர். அவர்களின் வழமைகள் மற்றைய குடிகளின் வழமைகளை ஒத்தனவாகும்.

**பரவர்**

பரவர் பூகோளத்தில் வாழுகின்றனர். அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். மீன் பிடித்தல்,விவசாயம்,மந்தை வளர்ப்பு என்பனவே அவர்களின் தொழில்களாகும்.

**சிங்களவர்**

சிங்களவர் இராசவன்னிபத்து, குமாரவன்னிபத்து என்னும் பிரிவுகளில் உள்ளனர். அப்பத்துக்களைப் பற்றி விபரிக்குமிடத்து அவர்களின் பழக்க வழக்கங்கள், வழமைகள், தொழில்கள் முதலியன தொடர்பான விபரங்கள் சொல்லப்படும்.

அநீதியான முறையில் வரிகளை வசூலிப்பதைத் தவிர்த்துக் கொள்ளக் கூடிய அதிகாரி ஒருவனை நியமிக்குமிடத்து ஒல்லாந்த அரசாங்கத்தின் அனுகூலமான ஆட்சியிலே புத்தளத்துக் குடிகள் அமைதியாக வாழமுடியும் என்பதை இந்த அத்தியாயத்தின் முடிவிலே நான் குறிப்பிட வேண்டும். அப்பொழுது வரிகளைக் கொடுப்பதோடு தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் அவர்களாற் தேடிக் கொள்ளமுடியும். அரசாங்கத்துக்கு வருடமொன்றிற்கு நான்கு தடவை ஊழியம் செய்வதற்கும் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் ஆறு நாட்கள் அவர்கள் சேவை செய்ய வேண்டும். எஞ்சிய காலம் முழுவதும் அவர்கள் தங்கள் சொந்த வேலைகளை விருப்பியவாறு செய்துகொள்ளலாம்.

**ஊழியம்**

1. மீனவரும் பரவரும் கடலிற் சேவை புரிய வேண்டும். வெள்ளாளரும் வாகையரும் இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்படுவர். அவர்கள் வேறொரு சேவையும் செய்வதில்லை.

2. சாயக்காரர் தங்கள் தகைமைக்கு ஏற்ப ஊழியம் செய்வர். அவர்களைப் பற்றிய விபரங்கள் முக்குவரின் தோம்பிலே பதியப்பட்டுள்ளது. நளவர் இரவிலே விளக்குப் பிடத்துச் செல்லவேண்டும். அத்துடன் புத்தளத்திலே பிடிபடும் யானைகளுக்கும் அதனூடாகக் கொண்டு செல்லப்படும் யானைகளுக்கும் அவர்கள் தென் ஓலை வெட்டிப்போடவேண்டும்.

3. சிங்களவர் இன்றுவரை அரசாங்கத்திற்கு ஏதேனும் சேவை புரிவதற்கு கடமைப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் பேராலும் அவர்கள் ஒன்றும் செய்வதில்லை. ஆனாலும் அவர்கள் தத்தம் சாதி முறைகளுக்கு ஏற்பக் கடமை செய்யவேண்டுமென்று நோம்புகளிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. முற்காலத்தில் அரசாங்க அதிபர்களாய் இருந்தவர்கள் மற்றச் சாதியாருக்குப் பாதகமான முறையில் ஊழிய சேவைகளை நடைமுறைப்படுத்தி உள்ளனர்.

புத்தளத்தில் உள்ள ஊழியக் காரரைப் பற்றிய விபரங்கள் மேல் வருமாறு உள்ளன.

| | சாதிப் பிரிவு | தொகை |
|---|---|---|
| (அ) | செட்டிகள் | 27 |
| (ஆ) | சோனகர் | 559 |
| (இ) | சோனகராயுள்ள நெசவாளர் | 153 |
| (ஈ) | கிறிஸ்தவ,சோனாக முக்குவர், சாண்டார், கடையர் | 231 |
| | மொத்தம் | 970 |

ஒவ்வொரு நாளும் 60 ஊழியக்காரர் சேவை புரிகின்றனர். அவர்களைப் பற்றிய விபரங்கள் மேல் வருவனவாகும்.

(அ) கோட்டைகள், கட்டடங்கள் ஆகியன தொடர்பான நாளாந்த வேலைகளில் ஈடுபடுவோர் 32 பேர்.
(ஆ) மரம் ஏற்றிச் செல்லும் தோணிகளிற் கடமை புரிவோர் 11 பேர்.
(இ) தண்ணீர் அள்ளுவோர் 8 பேர்.
(ஈ) தானியக் களஞ்சியத்திற் பணி செய்வதற்கு ஒருவர்.
(உ) தலைமை இராணுவ அதிகாரியின் தோட்டத்தில் வேலை செய்வோர் 2 பேர்.
(ஊ) புல்லு வெட்டுவோர் 2 பேர்.
(எ) தலாதிகாரிக்குப் பணிவிடை செய்ய 2பேர்.
(ஏ) மாமிசத்திற்கு வேண்டும் மிருகங்களை வெட்ட 2 பேர்.

அரசாங்க அதிகாரிகள் பிரயாணஞ் செய்யுமிடத்து அவர்களின் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிச் செல்வதற்கு வேண்டிய கூலியாட்களைத் தேடிக் கொடுப்பது தலைமைக் காரரின் கடமையாகும்.

மேலும் தெருக்கள், விடுதிகள், பாலங்கள் ஆகியவற்றை திருத்துவதற்கு வேண்டிய கூலியாட்களையுந் தலைமைக்காரர் தேடிக்கொடுக்க வேண்டும்.

சாதித் தோம்பு,ஊழியத் தோம்பு என்பனவற்றிலுள்ள விபரங்களை இயன்றவரையில் முழுமையாகவுஞ் சரியாகவும் இங்கு குறித்துள்ளேன் என்பதை நான் மேன்மை தங்கிய உங்களுக்குக் (தேசாதிபதிக்கு) குறிப்பிட விருப்புகின்றேன். இப்பொழுது ஊழியம் பற்றி அமைந்துள்ள ஏற்பாடுகள், கோட்டைகளையுங் கட்டடங்களையுங் கட்டுவதற்கு திருத்த வேலைப்பாடுகளுக்கும் போதுமானவை. சுண்ணாம்பு நீங்கலாகத் தேவையான எல்லாப் பொருள்களையும் ஊழியம் மூலமாக பெற்றுக் கொள்ள முடியும்.

(தொடரும்)


# அறிவித்தல்

மாநகர சபை, யாழ்ப்பாணம்


**கட்டாக்காலி மிருகங்களை கட்டி வளர்த்தல்**

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் கட்டாக்காலி ஆடு,மாடுகள் பொது இடங்களிலும் வீதிகளிலும் சேதங்களையும் விபத்துக்களையும் ஏற்படுத்த ஏதுவாக அமைவதை தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகிறது. ஆடு, மாடுகளை வீடுகளில் கட்டி வளர்ப்பதற்கு ஆவன செய்யுமாறும் இதனை மீறி கட்டாக்காலியாக அலையும் மிருகங்களை பிடிப்பதற்கும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 84 (1) ,84 (2) 84(3),85 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் பொதுமக்கள் யாவரும் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/7294)



யாழ். கல்வி வலயத்தில் யாழ். மாவட்ட தொழில்சங்கங்களின் பிரதிநிதிகளை அமெரிக்க தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம்.
(படம்:சாந்தன்)

# 5வது சந்தேக நபரை கைதுசெய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைவழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேலதிக நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் பாலச்சந்திரன் உதயபாலன் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கின் குற்றவிசாரணைப் பொறுப்பதிகாரி ரஞ்சித் டி சில்வா விசாரணை முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்காமையால் வழக்கை எதிர்வரும் 23ம் திகதி நீதிவான் ஒத்தி வைத்தார்.

இதேவேளை, இவ் வழக்கின் 5வது சந்தேக நபரான செல்வராசா அல்லது பாட்ஷா என்பவர் நடைபெற்ற வழககுகளுக்கு சமுகமளிக்காமையினால் அவரைக்கைது செய்யுமாறு நீதிவான் யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ச-3)

# புதிய பொலிஸ் நிலையம் காரைநகரில் திறப்பு

(காரைநகர்)

காரைநகர்ப் பிரதேசத் திற்கான பொலிஸ் நிலையம் கடந்த திங்கட்கிழமை சங்கலாவோடையிலுள்ள பிரதேசசபை கட்டடத்திற்கு அருகில் உள்ள தனியார் வீடு ஒன்றில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பொலிஸ் நிலையதத்திற்கு பொறுப்பதிகாரியாக உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் யு.பி.ஜெயசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைநகரில் திறக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் உப அலுவலகமாகவே செயற்படும் என யு.பி.ஜெயசிங்கா தெரிவித்தார்.

தேர்தல் காலத் தேவைகளிறகாக உடனடியாகத் திறக்கப்பட்டுள்ள இப் பொலிஸ் நிலையம் தொடர்ந்தும் இயங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை காரைநகர் பொலிஸ் நிலையத்திற்கான நிரந்தரக் கட்டடம் காரைநகர் வலந்தலைச் சந்தியில் அமையவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-246)

# பிக்குகள் அரசியலில் ஈடுபாடு
# ஜனாதிபதி ஆணைக்குழு கண்டனம்

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை எவரும் விரும்பவில்லையென ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிக்குமார் அரசியலில் ஈடுபடுவதை கண்காணிக்க நியமிக்கப்பட்ட அரசியல் ஆணைக்குழுவிற்கு இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்துடன், அரசியல் நடவடிக்கைகளில் இருந்து சங்கைக்குரிய பௌதத பிக்குமார் ஒதுங்கிக் கொள்வது நல்லதென பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

மாகாண சபைத் தேர்தல், பிரதேச சபைத் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகிய தேர்தல்களில் தேர்தல் அபேட்சகர்களாக பௌத்தபிக்குமார் பங்கேற்பதை தவிர்த்துக் கொள்வது அரசியல்கட்சிகளுக்கு நல்லது.

ஆயினும் ஆட்சிக்கு வரும் எந்தவொரு கட்சிக்கும் ஆலோசனைகளை வழங்கும் சுதந்திரம் மதகுருமாருக்கு உண்டு. இது தொடர்பாக எந்த விடயத்திலும் ஜனாதிபதி ஆணைக்குழு கட்டுப்பாடு விதிக்கவில்லை.

அவ்வாறன்றி பிக்குகள் அரசியலில் ஈடுபட முற்பட்டால், கடந்த 2500 வருடங்களாக பிக்குகளுக்கும மக்களுக்கும் இடையே இருந்து வந்த ஒருமைப்பாடும், உறவும் சீர்குலைந்து விடும்.

தேர்தல் தொடர்பான எந்தவொரு ஆலோசனைகளையும், கட்சிகள் அனைத்தும பௌத்த பிக்குகளிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிபபிடப்பட்டுள்ளது. (தி-61)

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(தொல்புரம்)

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன் விபரம் வருமாறு:-

பிரிவு -I

1 ஆம் இடம்:- ம.மதுசன்- யா/ வட்டு. மத்திய கல்லூரி.

2ஆம் இடம்:- எஸ்.சிவகரன்- யா/வட்டு. மத்திய கல்லூரி.

3ஆம் இடம் ச.இதயச்சந்திரன்- யா/ வட்டு. கார்த்திகேயா வித்தியாசாலை, சி.யாசோதரன் யா./வட்டு . மத்திய கல்லூரி, ஸ்ரீ.காருண்யா யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை.

பிரிவு- II

1ஆம் இடம்:- ப.நிஜந்தா - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

2ஆம் இடம்:- ச.விஜயலதா- சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி.

3ஆம் இடம் ச.கல்ப்பனா- வட்டு . மத்திய கல்லூரி.

பிரிவு - III

1ஆம் இடம்:- சி.ரீதிமதி- பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை.

2ஆம் இடம்:- சு.பிரணவன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

3ஆம் இடம் ஜ.றபிந்தா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

பிரிவு- IV

1ஆம் இடம்:- ச.நிஷாந்தினி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

2ஆம் இடம்:- இ.சர்மிளா பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை.

3ஆம் இடம் சி.காஞ்சனா- பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை. (உ-70)

## கொல்களம் அமைப்பதற்கு
# ஒதுக்கப்பட்ட நிதி
# திரும்பிச் செல்லும் நிலை

(சுதுமலை)

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள மாதகல் மற்றும் காக்கை தீவுப் பகுதிகளில் கொல்களங்கள் அமைப்பதற்கென, இவ்வாண்டு பிரமான அடிப்படையிலான வேலைத் திட்ட நிதியில் இருந்து 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும், இப்பகுதியில் மிதிவெடி அபாயம் உள்ளதால் நிதி திருப்பிச் செல்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் குறிப்பிட்டு, மேற்படி பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர் யாழ். அரச அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

காக்கை தீவுப் பகுதிகளில் அமைந்துள்ள கொல்களம் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுடன் இயங்குகின்றது.

அதிலே இறைச்சிப் பிரிசோதனை செய்வதை நிறுத்துமாறு மானிப்பாய சுகாதார வைத்திய அதிகாரி பல தடவைகள் அறிவித்துள்ளார். இதனைக் கருத்தில் கொண்டு கொல்களம் அமைக்க காக்கை தீவுப் பகுதியில் புதிய இடம் தெரிவு செயயப்பட்டு செலவு மதிப்பீடு செய்யப் பட்டதற்கிணங்க நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும் மேற்படி பகுதியில் மிதி வெடிகள் அகற்றுவது சம்பந்தமாக தொடர்புடையவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்ட போது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனை கருத்திற்கொண்டு உடனடியாக மிதி வெடிக்கள் அகற்றுவதற்கு ஆவன செய்யும் படி கேட்கப்பட்டுள்ளது. (உ-252)

## ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி
# 6 மாவட்டங்களில் வேட்புமனுத் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வகையில், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, கொழும்பு ஆகிய 6 மாவட்டங்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் மேற்படி கட்சி சார்பில் போட்டியிடுவோர் பெயர்கள் வருமாறு,

**திருகோணமலை**

காசிலிங்கம் விக்னேஸ்வரன், தங்கராசா புஸ்பராசா, ஆத்மலிங்கம் ரமணி, ஞானப்பிரகாசம் பூலோகராஜன், வல்லிபுரம் சித்திரவேல், சேவியர் கத்தரின், அன்ரனி ஜோசெப் ஏப்பிரகாம்.

**மட்டக்களப்பு**

அழகையா இராஜமாணிக்கம், கந்தையா அருமைலிங்கம், அந்துனன் கந்தசாமி, பாக்கியராசா பாஸ்கரன், ஐயாத்துரை தட்சணாமூர்த்தி, சாமித் தம்பி சிறிஸ்கந்தராசா, கந்தையா பத்மநாதன், சிந்தாத் துரை பரமேஸ்வரமூர்த்தி.

**அம்பாறை**

மார்க்கண்டு குணசேகரம் சங்கர், வேலாயுதம் ரவீந்திரன், நடராசா கிருபைராசா, நெல்சன் சுசில் எதிரிசிங்க, அபூபக்கர் சகாப்டீன், துரைராசாலால், காளிக்குட்டி சண்முகநாதன், கலுபண்டா ஞானரத்ன, லக்ஸ்மன் குலசிறி தர்மதாச, அலியார் முகமட் பிறதவுஸ்.

**வவுனியா**

அந்தோனிப்பிள்ளை ஜெயராஜா, சிவன் சிவகுமார், இளையதம்பி ஹரிசந்திரா, சவரியான் பொன வந்தூர் லெம்பட், செபமாலை திசவீரசிங்கம், குமாரகுரு சஞ்சீவ், அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரி, சுபசிங்க முதியான்சலாகே, குமாரசிங்க, குமாரசாமி ஸ்டனி.

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாக்ஸிஸ குழுவின் ஏற்பாட்டில "இலங்கை அரசியலில் மக்கள் விடுதலை முன்னணியின் வகிபாகம்" என்னும் தலைப்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள பிரிவு மண்டபத்தில் தலைவர் ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் ஆய்வரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. (தி)

## இரகசிய சிநேகம் திரைப்படம்

சலன சித்திரம் அமைப்பின் ஏறபாட்டில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் 'கம்பியூட்டர் காதல்' அதன விளைவுகள் வெளிநாடுகளில் இளை ஞர்களின் வன்செயல்கள ஆகிய வற்றை சித்திரிக்கும் "இரகசிய சிநேகம்" என்னும் இலண்டன் தமிழ் திரைப் படம் காண்பிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படம் எதிர்வரும் 13, 14 ஆகிய திகதிகளில் காலை, மாலை இரவுக்கட்சிகளாக நெல்லியடி "இராஜலஷ்மி" திரையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது. 13 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஊடகவியலாளர்களுக்காக காண்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## கடலேரியில் மீன் பிடிக்க தடையில்லை

(பலாலி)

தொண்டைமானாறு கடலேரியில் மீன்பிடிக்க கடந்த 22 ஆம் திகதி முதல் இராணுவத்தினர் தடை விதித்திருக்கின்றனர் என்று வெளியான செய்தியை மறுத்துள்ள பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம், மேற்படி பகுதியில் மீன் பிடிக்க படையினரால் எந்தவித தடையும் விதிக்கப்பட மாட்டாது எனவும் முன்னர் போல் தொழிலை மேற்கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளது.

# கண்காணிப்புக் குழுவுடன் புலிகள் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளிற்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பு விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப்பகுதியான வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் தரபபில் தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணித்தளபதி லலித் வவுனியா விளக்கு வைத்த குளம் முன்னரங்க காவல் நிலையப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்காணிப்புக் குழுசார்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியாப் பிரதிநிதி யார்லி மாட்டா உட்பட சிலர் கலந்து கொண்டனர்.

வவுனியா விளக்குவைத்த குளத்தில் அமைந்துள்ள முன்னரங்க நிலைகள் தொடர்பான விடயங்கள் குறித்து இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடும்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் மண்வெட்டிச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது. இதற்கான வேட்புமனு நேற்று நுவரெலிய மாவட்டச் செயலகத்தில் இறுதி நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டி இடுவதா? அலலது அரசியல் கட்சி ஒன்றுடன் சேர்ந்து போடடி இடுவதா? என்பது குறித்து, நேற்று ஆராயப்பட்ட கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தனித்துப் போட்டியிட கட்சி தீர்மானித்த போதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரும் கட்சிக்கு தமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் என கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (தி-61)

## வேதன உயர்வு

(சுதுமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள மாநகர சபைகள், பிரதேச சபைகள், நகர சபைகளில் கடமைபுரியும் உளளூ ராடசி மன்ற அபிவிருத்தி உதவியாளர் மற்றும் உளளூராட்சி உதவியாளர் ஆகியோர்களின் 2003 ஆம் ஆண்டிற்கான வேதன ஏற்றத்தை வழங்குமாறு வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி து.விஜயலட்சுமி சகல உளளூராட்சி மன்றங்களுக்கும் கடித மூலம் அறிவித்துள்ளார். (உ-252)

## கூட்டம் ஒத்திவைப்பு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை அரசிடம் ஒப்படைப்பதா? அல்லது முன்புபோல் இயக்குவதா? எனபதைத் தீர்மானிப்பதற்காக கடந்த ஞாயிறன்று கூட்டப்பட்ட கூட்டம்எதுவித தீர்மானங்களும் எடுக்கப்படாத நிலையில் ஒத்திவைக்கப்பட்டது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.இராசசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கலந்த கொண்ட பொதுச் சபை உறுப்பினர்கள் முன்னர் இவ் வைத்தியசாலை பலவகையான நோயாளர்களுக்கு சிறந்த சேவையாற்றி வந்தது. தூர இடங்களில இருந்துவருகைதரும நோயாளர்கள குடும்பமாகத் தங்கி சிகிச்சை பெற்றுச செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தது.

ஆனால், இன்று நிரந்தர வைத்தயர் கூட இல்லாமல் இருக்கின்றது. இந்நிலையை மாற்றி மக்கள் பயனபெறக் கூடியவாறு வைத்திய சாலையைச் செயற்படுத்துமாறு கோரிய போதும் எதுவித முடிவுகளும் எடுக்கபபடாத நிலையில் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. (உ-50)

# தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேச குழுவுடன தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

திருமதி செல்வராஜா சிவபாக்கியம் - அம்மன்கோவிலடி மயிலிட்டி வடக்கு, சிவானந்தன் சகுந்தலாதேவி - கல்வயல், சாவகச்சேரி, ச.வசந்தலட்சுமி 20/1 எழிலூர், கொழும்புத்துறை, ச.தவராசாலாப், அச்சுவேலி, ந.சரஸ்வதி - சுதுமலை தெற்கு, மானிப்பாய், வ.பவளம் 70 எழிலூர் கொழும்புத் துறை.

ச.சறோயாதேவி - கருப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடி, அராலி தெற்கு, த.கிரியலின்- மல்வம் உடுவில், ச.மரியம்மா- மே/பா. துரைராசா, 74/1 குருசோ வீதி யாழ்ப்பாணம், ந.கண்மணி- செல்லக்கிளி அம்மான் இடம் பெயர்ந்தோர் முகாம் அரியாலை, த.கிருபராணி- செட்டியார் மடம், அராலி வடக்கு வட்டுக்கோட்டை, ச.ஜெகதாம்பாள்- சங்குவேலி மானிப்பாய்.

மனோகரன் லலிதா- சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பு, யோசப் / பிரீடா- 41/3 செம்மணி வீதி நல்லூர், குணபாலசிங்கம் கமலராணி வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு, நாகமணிப்பிள்ளை பிரின்ஸ் நவநேசன்- தட்டார் ஒழுங்கை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, ஞானேஸ்வரி தர்மகுலசிங்கம், தொட்டிலடி, சங்கானை. அப்புத்துரை விக்னேஸ்வரன்- தம்பளாவத்தை, அளவெட்டி தெற்கு.

சுந்தரராணி சிவஞானசுந்தரம்- இலவச கல்வி நிலையம், மானிப்பாய் வீதி, மானிப்பாய், நாகம்மா- செல்வராசா, மானிப்பாய் வடக்கு, மாரிமுத்து ஞானசேகரம் 9ஆம் குறுத்தெரு, பொம்மைவெளி யாழ்ப்பாணம், அருட்செல்வி நீதிராசா- ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி, பாஸ்கரன் மேரி கஜோர்- 71,5ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம், செலவராசா நல்லம்மா- 2ஆம் குறுக்குத் தெரு மணியம்தோட்டம், கந்தையா திருசெல்வம்- மே/பா. ந. குமரகுருநாதன் மூளாய்ப் பிள்ளையார் கோவிலடி, மூளாய்.

மார்க்கண்டு உமாதேவி- ஐந்து சந்தி தபாறகந்தோர், வண்ணார் பண்ணை, கலாதாஸ் கமலகுமாரி- தண்ணீர் தாங்கி வீதி, குருநகர், குலசேகரம் பாலகிருஸ்ணன்- 33 கைலாய பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், அரியகுட்டி லட்சுமிப் பிளளை- சுதுமலை கிழக்கு மானிப்பாய், சபாபதிப் பிள்ளை ராதா வாசம், வல்வெட்டித்துறை. (உ)

## ஸ்ரீ.மு. காங்கிரஸ் கட்சியும்
# வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தமது வேட்பு மனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்தனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மரச் சின்னத்தில போட்டியிடவுள்ள இககட்சியின் வேட்பு மனுவை அதன் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் மௌலவி சுபியான் யாழ்.மாவட்ட தொிவு அத்தாட்சி அலுவலர் செபத்மநாதனிடம் காலை 10.15 மணியளவில் கையளித்தார்.

இதேவேளை, கூசாச் சின்னத்தில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள சுயேட்சைக்குழு ஒன்றும் நேற்று முன்தினம் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளது.

வன்னிமாவட்ட வேட்பாளர்களைப பெரும் பான்மையாகக் கொண்ட இவ வேட்பு மனுவை முதன்மை வேட்பாளர் முஹமது ராபிச் யாழ்.மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலரிடம் கையளித்தார்.

இச் சுயேட்சைக் குழுவில் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் வேட்பாளர்கள் கூட்டாகப போட்டியிடவுள்ளமையும் இங்கு குறிப்பிடதக்கது.

இம மனுத்தாக்கல்களின் நிறைவில் இவ்விரு முதன்மை வேட்பாளர்களும் செய்தியாளகளுடன் தனித தனியே பேசினர்.

இதன்போது, தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் தம்மிடையே ஒன்றுபட்டு தம்மைத் தாமே ஆழவேண்டும. இவ்விரு இனமும் சம உரிமையுடன் தனித்துவமாக வாழ உரியவழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர். (உ-4)

## இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி அருள்மிகு ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக விழாவை முன்னிட்டு இடம்பெற்று வரும் இசை ஆராதனையின்மூன்றாம் நாளான இன்று தவநாதன் றொபேர்ட்டின் பாட்டுக் கச்சேரி பக்க வாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ)

## மொரோக்கோவில் பூமியதிர்ச்சி

# உயிரிழந்தோரின் எண்ணிக்கை அறுநூறாக அதிகரிப்பு

(ராபர்ட்)

வடக்குமொரோக்கோவில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற பூமியதிர்ச்சி காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்துள்ளது.

6.5 ரிச்டர் அளவிலான பூமியதிர்ச்சியில் பிரதான துறைமுக நகரமான அல்ஹெசிமாவில் 18 கிலோ மீறறர் பரப்பளவுப் பிரதேசம் முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தினால் 300க்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாகவும் 70 வீதமான மக்களின் வீடுகள் இடிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் பலமடங்கு அதிகரிக்கலாமென அஞ்சப்படுவதாக ஹெசிமா மாநிலத்தின் பாதுகாப்புத் துறைப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.


இடிந்துபோன வீடுகளின் இடிபாடுகளுக்கிடையே உயிர் பிழைததவர்கள் இருக்கின்றார்களா என்று மீட்புக் குழுக்கள் மும்முரமாகத் தேடிவருகின்றன.

மத்திய தரைக் கடல் துறைமுக நகராகச் சுற்றுப்புறத்திலும் நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர்.

மக்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த நிலநடுக்கம் இடம்பெற்றது.

நில நடுக்கத்துக்குப் பிந்திய அதிர்ச்சிகளும் மழையும் மலையடிவாரத்தில் உள்ள கிராமங்களின் உதவிப் பணி முயற்சிகளை மிகவும் கடினமாக்கின.

கடந்த 15 ஆண்டுகளுள் நிகழ்ந்த பூமியதிர்ச்சிகளுள் இதுவே பாரிய பூமியதிர்ச்சி எனவும் 1994 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 6 ரிச்டர் அளவிலான பூமியதிர்ச்சியே இதுவரை காலமும் அந்நாட்டின் பாரிய பூமியதிர்ச்சியாக இருந்ததெனவும் கூறப்படுகிறது. (து-9)



ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு கழகத்தின் செயற்கைக்கோள் ஏவுகணைத் தளத்தில் ஏற் பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி விஞ்ஞானிகள் உட்பட 6 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 3 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்த மூவரும் சென்னையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



பிலிப்பைன்ஸ் நாட்டில் பிறந்து 22 மாதங்களான தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்களுக்கு நியூயோர்க்கில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடைபெறஉள்ளது. அறுவை சிகிச்சைக்காக குழந்தைகள் அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்னதாக எடுக்கப்பட்ட புகைப் படம்.

## ஸ்ரீஹரி கோட்டா விண்வெளிமைய விபத்து

# இறந்தோர் குடும்பங்களுக்கு 5 இலட்சம் நஷ்டஈடு

(சென்னை)

ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் 6 பேர் உயிரிழக்கக் காரணமான தேசிய விபத்துக் குறிதது உயர்மட்டக்குழுவின் விசாரணைகள நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்த விபத்துக் குறித்து பூர்வாங்க அறிக்கையை 10 நாட்களுககுள் சமர்ப்பிக்குமாறும் இறுதி அறிக்கையை 6 வாரங்களுக்குள் வழங்கு மாறும் விசாரணைக்குழு கேட்டிருப்பதாக இஸ்ரோ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே இந்த விபத்தினால் ஏற்பட்டுள்ள இழப்பு சுமார் 70 இலட்சம் ரூபா என்று பெங்களூரில் வெளியான இஸ்ரோவின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு குடியரசு தலைவர் அப்துல் கலாம் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார். (து-9)

# விண்வெளி வீரர்கள் வானவீதியில் நடமாடுவதற்கு நாகா அனுமதி

விண்வெளியில் பூமியை வலம் வந்துகொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடமையாற்றும் வீரர்கள் நிலையத்திற்கு வெளியே வந்து வானவீதியில் நடமாடுவதற்கு நாகா ஆராய்ச்சி நிலையம் அனுமதி வழங்கியுள்ளது.

அமெரிக்கரும், ரஷ்யருமான இரண்டு விண்வெளிவீரர்களும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெளியே பலமணி நேரமாக கடமையாற்ற இருக்கின்றனர்.

மின் விநியோகத்தடை, மூடப்பட்ட கதவு ஒன்றை திறத்தல், தொலைத தொடர்பு வாய்ப்பு என்பனவற்றை சீரமைப்பதற்காகவே அவர்கள நிலையத்துக்கு வெளியே வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இருவரும் சர்வதேச நிலையத்துக்கு வெளியே வந்ததும் நிலையத்தினுள் எவரம் கடமையில் இருக்க மாட்டார்களென நாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து-2)

# வடகொரியாவின் அணுவாயுத் திட்டம் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாகும்

(பியோங்யாங்)

வடகொரியாவின் சநதேகத்துக் இடமான அணுவாயுத்திட்டங்களால் எழுந்த சர்ச்சைகளைத் தீர்க்கும் பேச்சுவார்த்தை இன்று ஆரம்பமாகவுள்ளது.

6 நாடுகள் கலந்து கொள்ளும் இப் பேச்சுவார்த்தை குறித்து வடகொரியாவின் சார்பில் நம்பிக்கையூட்டும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை விட அனுகூலமான சூழ்நிலை காணப்படுகின்றது என்று வடகொரியாவின் துணை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் வடகொரியா, அமெரிக்கா, தென்கொரியா, சீனா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

வடகொரியாவின் குழுத்தேனியா அணுவாயுத் திட்டங்கள் மாத்திரமன்றி குண்டுகளைத் தயாரிக்கும் திடடம் பற்றியும் பேச்சுவார்த்தைகள் நடததப்படவேண்டும் என்பது ஏனைய நாடுகளின் முக்கிய கோரிக்கையாகும். (து-9)

# ஹெயிட்டி ஜனாதிபதி அரிஸ்ரைட்டின் வேண்டுகோளை எதிர்க்கட்சி நிராகரித்தது

(போர்ட்ஆபிரின்ஸ்)

ஹெயிட்டியில் எதிர்க்கட்சி யுடன இணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை நிறுவுமுகமாக அந்நாட்டு ஜனாதிபதி யூன்பெற்றன் அரிஸ் ரைட் விடுத்த வேண்டுகோளை எதிர்க்கட்சி நிராகரித்துள்ளது.

ஹெயிட்டியில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு சுமுகத் தீர்வொன்றைக் காணும் முகமாக, அமெரிக்கா வழங்கிய ஆலோசனைக்கு அமைய, ஹெயிட்டியின் ஜனாதிபதி அந்நாட்டு எதிர்க்கட்சியை தம்மோடு இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்வருமாறு விடுத்த வேண்டுகோளை எதிர்க்கட்சியினர் நிராகரித்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஹெயிட்டியின் தென்பகுதி நகரம் ஒன்றை அந்நாட்டின் தீவிரவாதக் குழுக்கள கைப்பற்றியிருந்த நிலையில், தமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை நிராகரித்து எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

யூன் பெற்றன் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைப்பதுவே இப்போதைய அரசியல் நெடுக்கடிக்குத் தீர்வாகும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு அமெரிக்கா நிர்வாகததுடனான தொடர்பைத் துண்டிப்பது மற்றுமொரு தீர்வெனவும் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# ஐ.நா.சபையின் கௌரவத்தை அமெ - பிரி.சிதவடையச் செய்தது

## சிரேஷ்ட ஆயுதப் பரிசோதகர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவும் பிரிட்டலும் ஐக்கிய நாடுகள் சபையின் கௌரவத்தையும் மேலாண்மையும் சிதைவடையச செய்துவிட்டதாக முன்னாள் சிரேஷ்ட ஆயுதப் பரிசோதகர் காண்ஸ் பிளிக்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஈராக்கில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் ஆகியோர் திட்மிட்டு மேற்கொண்ட யுத்தநடவடிக்கைகள் காரணமாக ஜக்கிய நாடுகளின் கௌரவமும் மேலாஷ்மையும் சிதைவடைது விட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரங்களில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் இவ்வாறன செயற்படுகளில் இறங்கியுள்ளமை கடிக்கத்தக்கது எனவும் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹூசைனை அந்நாட்டு மக்கள விரும்பாத போதிலும் அவர்கள் மத்தியில் பயங்கரவாதியாக அவர் இருக்கவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் .(து-9)

# லிபியாவின் அணுவாயுதத் திட்டங்கள் முற்றாக நீக்கப்பட வேண்டும்

(திரிப்போலி)

லிபியாவின் அணுவாயுதத் திடடங்கள் எதிர்வரும் யூன் மாதத்திற்கு முன்னர் முற்றாக நீக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதாக ஜக்கிய நாடுகள் சபையின் அணுவாயுதக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் தலைவரான முஹமட் எல்பராடே ஈரான், வடகொரியா போன்ற நாடுகளும் லிபியாவை பின்பற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுவள நிறுவனத்தின் தலைவர் லிபியாவிற்கான இரண்டு நாள் விஜயத்தை ஆரம்பித்திருக்கின்றார்.

அமெரிக்கா, பிரிட்டன் நிபுணர்கள் லிபியாவின் அணுவாலைகளை அப்புறபபடுத்தி வருவதாகவும் தமது அமைப்பு விரைவில் அதனை அங்கீகரிக்கும எனவும் எல்பராடே தெரிவித்தார். (து-2)



ஜப்பானில் உள்ள உயிரியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வந்த பண்டா வகை கரடி இரண்டு குட்டிகளை ஈன்றது. தற்போது அந்த இரண்டு குட்டிகளும் நல்ல உடல்நலத்துடன் உள்ளன. உயிரியல் பூங்காவில் உள்ள மரக்கிளையை பற்றிக் கொண்டு உட்காந்திருக்கும் பண் டாக் குட்டி ஒன்று.

# இஸ்ரேலின் பாதுகாப்புச் சுவர் அமைப்புக்கு சர்வதேச அரங்கில் பலத்த கண்டனம்

(ஜெருசலேம்)

மேற்குக் கரையில் பாதுகாப்பு மதிலை அமைத்துவரும் இஸ்ரேலிய அரசாங்கம் சர்வதேச அரங்கில் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

இந்த மதில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதா என்பதை ஆராயும் விசாரணைகள் ஹெய்ட் நகில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் 2 ஆவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

தற்கொலைக் குண்டுத்தாரிகளைத் தடுப்பதற்கு இந்த வேலி கட்டாயமானது என்பது இஸ்ரேலின்வாதமாகும் ஆனால் பலஸ்தீனர்கள் இதனை நில அபகரிப்பாக நோக்குகின்றனர்.

குறித்த விசாரணையில் இஸ்ரேலிய அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை, சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்கும் அவசியமும் இஸ்ரேலுக்குக் கிடையாது எனக் கூறப்படுகிறது. (து-9)

# சின்னாபின்னப்பட்டுப் போயுள்ள சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுபடும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை

## தென்கிழக்குப் பல்கலை விரிவுரையாளர் ஏ. நியாஸ்

(கொழும்பு)

**சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் புரிந்துணர்வுடன் ஒன்றுபட்டு செயற்படும் வரை அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது. அத்துடன், சிறுபான்மையின மக்கள் ஒற்றுமையுடன் வாழும்வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முடியாது என்று தெரிவித்துள்ளார் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆங்கிலப் போதனாசிரியருமான எஸ். எம்.ஏ. நியாஸ்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

பெரும்பான்மையினக் கட்சிகள் சில பிளவுபட்டு இருந்தாலும், சிங்கள மக்களின் நலன்களைப் பாதிக்காத வகையிலேயே அக்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

### நலன்களுக்குப பங்கம்

ஆனால், சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுபடாது செயற்படுகின்றமை சிறுபான்மையின மக்களின் நலன்கள் மிகவும் பாதிப்படையச் செய்கின்றன. சிறுபான்மைக் கட்சிகளின் ஒற்றுமையின்மையால் சிறுபான்மையின மக்களாகிய தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் சிங்கள மக்களால் நசுக்கப்பட்டு வருகின்றன.

அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது இழுத்தடிக்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி, பதவி மோகமும் குரோத எண்ணங்களும் இச்சிறுபான்மைக் கட்சிகளிடையே தாராளமாக இருக்கின்றன. இதனால், ஒரு கட்சியைப் பற்றி இன்னொரு கட்சி விமர்சனம் செய்வதும ஒரு கட்சியில் உள்ளவர்களை மற்றைய கட்சியில் உள்ளவர்கள் இம்சைப்படுத்துவதுமாக இருக்கின்றார்கள்.

இந் நிலைமை மோசமடைகின்றபோது கொலைகளும், வன்முறைகளும் இடம்பெறுகின்றன.

இந்நிலைமை தொடர்கின்றபோது அது ஒரு யுத்தத்திற்கு வழி வகுக்கின்றது. அதுமட்டுமன்றி,கட்சியில் உள்ளவர்கள் இத் தகைய செயல்களுக்கு மக்களையும் பயன்படுத்தி மக்களிடையே ஓர் குழப்பத்தையும் பிரச்சினையையும் ஏற்படுத்தி விடுகின்றார்கள்.

### ஒன்று படுதலும் ஒற்றுமையும்

என்னைப்பொறுத்தவரையில் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுபடாத வரை மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.

இதற்கிடையில் சிறுபான்மையினக்கட்சிகள் எல்லாம் அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காக செயற்பட்டு வருகின்றதே தவிர, தமது மக்களுக்காக, தமது மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காகச் செயற்படுவதில்லை. உதாரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைக் குறிப்பிடலாம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடனும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் முஸ்லிம் மக்களுக்கு எதைப் பெற்றுக்கொடுத்தார்?

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட ஹக்கீம், அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தும் வகையில் சில செயற்பாடுகளை மேற்கொண்டார்.

இதனால், புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் செல்லுபடியற்றதாகி விட்டது.

இவை தவிர,அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் எனக் ஹக்கீம் கோரி வந்த போது அதனை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை.இது யாவரும் அறிந்த விடயமே.

இந்நிலையில், அதாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முஸ்லிம்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்காத பட்சத்தில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்திருப்பது முஸ்லிம் மக்களிடையே கடும் விசனத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

### உறுதித்தன்மை

இந்த விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

"தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்கான உரிமையை பெற்றுக்கொடுக்க முன்வரும் எந்தவொரு அதிகாரமுள்ள அரசாங்கத்துடனும் பேசத் தயார்" எனப் புலிகள் கூறியிருக்கின்றார்கள்.

இங்கு அவர்கள் தமிழ் மக்களின் நலன்களை கவனத்தில் கொள்கின்றார்கள்.

அரசியல்வாதிகளைப் போல் சுயநலம் கொண்டவர்கள் அல்ல என்பதை புலிகளின் இந்த அறிவிப்பு விளங்கப்படுத்தியிருக்கின்றது.

அத்துடன், விடுதலைப்புலிகளின் இந்த அறிவிப்பு ஐக்கிய தேசிய முன்னணிக்கு பலத்த அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அதுமட்டுமன்றி இதனால் ஐக்கிய தேசிய முன்னணி மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை படிப்படியாக குறைய ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த 2 வருட காலமும் தமிழ் மக்களுக்கு எதுவும் பெரிதாகச் செய்து விடவில்லை. ஒழுங்கான முறையில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லவில்லை. என்பதனை விடுதலைப் புலிகளின் இந்த அறிவப்பு மூலம் விளங்கிக்கொள்ள முடிகினறது.

### புதிய பலம்

இதற்கிடையில் ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து செய்துள்ள கூட்டணி "ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி" என்ற பெயரில் இம்முறை தேர்தலில் போட்டியிடத் தயாராகி வருகின்றது.

இம் முன்னணியில் பல கட்சிகள் இணைந்துள்ளதால் பலம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

அத்துடன், இம் முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி., சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளது.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு விடுதலைப்புலிகள் உட்பட எல்லாக் கட்சிகளுடனும் பேசத் தயார் எனவும் கூறியிருக்கின்றது.

இதனால், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் மட்டும் தான் சமாதானம் ஏற்படும் என்ற நிலைமை மாறிவிட்டது.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணியின் சில செயற்பாடுகள் மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்தவில்லை.குறிப்பாக சிங்கள மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றன.

எனவே,இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் சகல இன மக்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சகல இன மக்களும் திருப்தி அடையும் வகையில், நியாயமான முறையில் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய வல்லமை எந்தக் கட்சியிடம் இருக்கின்றதோ அந்தக் கட்சியே தேர்தலில் வெற்றிபெறும் என்பது எனது நம்பிக்கையாகும் என்று குறிப்பிட்டார். (உ-60,10)

---

# தையல் மனையியல் கண்காட்சி

(காரைநகர்)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேசசெயலக பிரிவுகளின் தையல் மனையியல் பொருட்காட்சியும் விற்பனையும் காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தில் எதிர்வரும் 28ஆம்திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் தலைமையில் நடை பெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச உதவி அரசஅதிபா வே. சாம்பசிவமும் கெளரவ விருந்தினர்களாக அதிபர்களான ஆ. பாலகிருஷணன், சு. வேலாயுதபிள்ளை, ந. பரமசிவம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-248)

---

# பௌத்த மகாசங்க ஆதரவுடன் தர்மராஜ்ய கொள்கை வெளியீடு

## ஆயத்தப்படுத்துகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தர்மராஜ்ய கொள்கை எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி வெளியிடப்படும் என அக்கட்சியின் செயலாளர் நாயகம் உடுவே தர்மலோகா தேரர் அறிவித்துள்ளார்.

கட்சியின் தர்மராஜ்ய கொள்கைக்கு பௌத்த மகாசங்கத்தினா் அனைவரும் ஆதரவு வழங்குவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தேர்தலில் வெற்றி பெற்று அதிக ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் கூட தமதுகட்சி எந்த வொரு அரசியல் கட்சியுடனும் கூட்டுச் சேராது.

அதேநேரம்,தேர்தலில் வெற்றி பெற்று,தர்மராஜ்ய கொள்கையின்படி நாட்டை ஆளும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஜாதிக ஹெல உறுமய விரோதமாக செயற்படாது என்றும் கட்சியின் செயலாளர் நாயகம் உடுவே தர்மலோகா தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

---

# தமிழ்ச்செல்வன் - ஹொவ்டே சனிக்கிழமை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியூறு ஹொவ்டே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை எதிர்வரும் 28ஆம்திகதி சனிக்கிழமை கிளிநொச்சியில் சந்திக்கவுள்ளார்.

மீண்டும் கண்காணிப்புக் குழுத் தலைவராக பதவியேற்றுள்ள பியூறு ஹொவ்டே, பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் பேச்சுக்களை நடத்திய பின்னர், மட்டகளப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்தார்.

அவர் அம் மாவட்டங்களின் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், அப்பிரதேசங்களில் உள்ள பாதுகாப்புக்குழு அதிகாரிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், கண்காணிப்புக்குழுவின் மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஆலோசனைகளை நடத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(தி-61)

---

# சூரியன்- பூமி இடையிலான தூரத்தைக் கணிப்பிட வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜுன் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக் கிரகம் சூரியனை மறைக்கும் விதமாக சூரியனின் பாதையில் வரவுள்ளது.

விடிவெள்ளி என்று அழைக்கப்படும் இவ் வெள்ளிக்கிரகம் நிலவைப் போல் பூமிக்கு நெருக்கம் இல்லாததால் கிரகணம் ஏற்படமாட்டாது எனினும் சூரியனுக்கு மத்தியில் கரும்புள்ளி போல் தோற்றம் தரும்.

ஆசியா மற்றும் ஆபிரிக்கா, ஐரோப்பியா போன்ற நாடுகளிலும இம்முறை தென்படவுள்ள இக்காட்சி மூலம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தைக் கணக்கிட முடியும் எனத் தெரியவருகிறது. (உ-8)

---

# ஹொரவப் பொத்தானை பிரதேச சபை கலைப்பு

(கொழும்பு)

அனுராதபுரம் மாவட்டத்தில் ஹொரவப் பொத்தானைப் பிரதேச சபையும், காலி மாவட்டத்தில் பலப்பிட்டிய பிரதேச சபையும் கடந்த திங்கட்கிழமை கலைக்கப்பட்டுள்ளன.

ஹொரவப் பொத்தானைப் பிரதேச சபை வடமத்திய மாகாண சபையை முதலமைச்சர் பேட்டி பிறேம்லால் திஸ்ஸ நாயக்கவும், பலப்பிட்டிய பரதேசசபையை தென்மாகாண முதலமைச்சர் எச்.ஜி ஸ்ரீசேனாவும் கலைத்துள்ளனர்.

இவ்விரு பிரதேச சபை உறுப்பினர்களும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக முதலமைச்சர்களுக்கு தகவல்கள் கிடைத்தன. இதனையடுத்து, 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டங்களுக்கு அமைவாக இவ்விரு பிரதேச சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, இவ்விரு பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் அனைத்தும் உடன் அமுலுககு வரும் வகையில் அனுராதபுர மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொறுப்பேற்றுள்ளார். (தி-61)

---

# பிரசார ஊர்வலங்களுக்கு பொலிஸ்மா அதிபர் தடை

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு, பிரசார ஊர்வலங்களை நடத்துவதற்கு இம்முறை அனுமதி வழங்கப்படமாட்டாது.

இக் கட்டுப்பாட்டு நடைமுறை தேர்தல் முடிவடைந்த பின்னரும், தொடர்ந்து 48மணித்தியாலங்கள் அமுலில் இருக்கும் என பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா அறிவித்துள்ளார்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்த பின்னர் ஒவ்வொரு கட்சி ஆதரவாளர்களும் வாகனப் பேரணிகள் மற்றும் ஊர்வலங்களை நடத்துவதால், மோதல்கள் இடம்பெறச் சந்தர்ப்பம் உண்டு. இதனைத் தடுக்கும் பொருட்டு கட்சிகளுக்கு ஊர்வலம் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதனை மீறி ஊர்வலங்களை நடத்த முயலும் கட்சிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் எச்சரிக்குள்ளார். (தி-61)

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. -குறள்

வலம்புரி

## பிரிட்டிஷ் அமைச்சரின் அர்த்தமுள்ள கோரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து உள்நாட்டவர்கள் கொண்டிராத அக்கறையும், தெளிவும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் உண்டு. இலங்கையில் நிலவும் இனவிவகாரத்தை வெளிநாடுகள் பன்முகப்பார்வையுடன் நோக்குகின்றன. இனவிவகாரம் தீர்க்கப்படாமல் தொடர்ந்து நீடிக்குமேயானால், அதன் விளைவு பாரதூரமானதாக இருக்குமென வெளிநாடுகள் அபாய எச்சரிக்கை விடுத்திருந்தன.

எனினும் உள்நாட்டு அரசியல் வாதிகளும், ஆட்சியாளர்களும் இனப்பிரச்சினை குறித்து எந்த வித அக்கறையுமின்றி இருந்தனர்.

நீண்டகால யுத்தத்தோடு பயணிக்கும் இலங்கை நாட்டின் எதிர்காலம் ஆபத்து நிறைந்ததாக இருப்பதை வெளிநாடுகளே எச்சரிக்கை செய்தன. இதன் காரணமாகவே இலங்கை ஆட்சியாளர்கள் ஓரளவேனும் இனவாதப் பிரமையில் இருந்து தலையை நிமிர்த்த முற்பட்டனர். எனினும் மாயையின் மயக்கம் அவர்களுக்கு தெளிவை வழங்கவில்லை.

இதனால், நோர்வேயின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளையும் நிர்மூலமாக்கும் வகையில் அதிகார பீடத்திலிருந்தவர்கள் நடந்துகொண்டனர்.

இலங்கையில் தேர்தல் நடத்துவதன் மூலம் சமாதான முயற்சிகள் பாதிப்படையும், பொருளாதார மந்த நிலையை மேலும் உயர்த்துமென்றெல்லாம் வெளிநாடுகள் ஆலோசனை கூறிய போதும் இந்த நாட்டிற்கு நானே ராசா, நானே மந்திரி என்பது போல பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலும் அறிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளிடம் நிதியுதவி கேட்டு கையேந்தும் இலங்கை, உதவி வழங்கும் நாடுகளின் ஆலோசனைக்குச் செவிசாய்க்காமல் விடுவதிலிருந்து இலங்கைத் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை உலக நாடுகள் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

எதுவாயினும், இனப்பிரச்சினையைத் தீர்த்து நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். பாராளுமன்றத்தைக் கலைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றெல்லாம் வெளிநாடுகள் முன்வைத்த கோரிக்கைகள் யாவும் நிராகரிக்கப்பட்ட நிலையில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மைக்ஒப்பிறெய்ன் ஒரு முக்கியமான வேண்டுகோளை தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் விடுத்துள்ளார்.

அதாவது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குக் குந்தகம் ஏற்படாதவாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதே பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் கோரிக்கையாகும்.

இலங்கையில் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் முடிவடைந்த நிலையில் அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளைநடைபெறப்போகும் தேர்தல் பாதிக்கும் எனக் கூறிய பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மைக் ஒப்பிறெய்ன் அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முறிவடையுமேயானால் அது சமாதான முயற்சிகளை பெரும் பாதிப்புக்குள்ளாக்கும் எனவும் எச்சரிக்கை செய்துள்ளார்.

அரசு-புலிகள் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதிக்காத வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் முன்வைத்த அர்த்தமுள்ள கோரிக்கைக்கு தென்னிலங்கை அரசியல் வாதிகள் செவிசாய்க்க வேண்டும்.

இல்லையேல் தேர்தலால் சமாதானம் குழம்பிப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆகவே தேர்தலைத் தவிர்ப்பது இனிமேல் ஆகாத விடயம் என்ற வகையில், யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் குழப்பாமல் பாதுகாப்பதே புத்திசாலித்தனமானதாகும்.

# காணாமல் போனோர் குறித்த 63 ஆட்கொணர்வு மனுக்கள்

## யாழ்.மேல் நீதிமன்றில் இற்றைவரை தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 1996ம், 97ம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களில் மேலும் 40பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனிதஉரிமைகளும் அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம். றொமீடியஸ் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

காணாமல் போனவர்களான அரசமுடி கோடீஸ்வரன் (நாவற்குழி தெற்கு), சின்னத்தம்பி சிவகுமார் (தச்சன் தோப்பு), சின்னத்தம்பி திருவருட்செல்வன் (கோகிலாக் கண்டி), அந்தோனி திலகரட்ணம் (நாவற்குழி தெற்கு), கந்தையா புஸ்பராசா (தச்சன் தோப்பு), கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன் (நாவற்குழி), ஜே.ஏ.அமலானந்தன் (நாவற்குழி), ஈ.எம்.ஜெயசீலன் (நாவற்குழி), பரமநாதன் தவேஸ்வரன் (கோகிலாக்கண்டி), இரத்தினம் இராசமலர் (தச்சன்தோப்பு), சீனியர் தர்மலிங்கம் (கந்தரோடை), முருகன் சிவராசா (மட்டுவில் ஸ்கந்தபுரம்), முருகன் ஜெயரட்ணம் (மட்டுவில் ஸ்கந்தபுரம்), பொன்னன் ரவீந்திரன் (கைதடி தெற்கு) வேலுப்பிள்ளை உதயகுமார் (கொடிகாமம்) ஆகிய 15 பேருடைய ஆட்கொணர்வு மனுக்கள் கடந்த திங்கட்கிழமையும்;

ஆசீர்வாதம் பெர்னாண்டோ (கொய்யாத்தோட்டம்), கணேஸ் றமேஸ் (நாவற்குழி தெற்கு) , தர்மலிங்கம் சுவின்தராஜன் (நாவற்குழி தெற்கு), சிதம்பரப்பிள்ளை சிதம்பரநாதன் (நாவற்குழி தெற்கு), இராமநாதன் அன்னலிங்கம் (நாவற்குழி தெற்கு), கோபாலப்பிள்ளை அம்பிகைபாலன் (நாவற்குழி தெற்கு), மைக்கல் பேனாட் ஜோன்சன் (கொய்யாத்தோட்டம்), ஆரோக்கியநாதன் அன்ரன் பெனடிக்ஸ் (நாவற்குழி), பூபாலசிங்கம் ஜெயலலிதா (மறவன்புலோ), சின்னையா இராமசாமி (மட்டுவில் தெற்கு), அன்ரனி அனிஸ்டன் (பாசையூர்), சிவகுரு தங்கத்துரை (நாவற்குழி), செல்லத்துரை நந்தகுமார் (புத்தூர் கிழக்கு), பொன்னையா ஜெயராஜா (நாவற்குழி), லோகேஸ்வரன் சேரன் (அரியாலை), பூதத்தம்பி ஜதீஸ்குமார் (புத்தூர் கிழக்கு), சுப்பிரமணியம் சுதாகரன் (அரியாலை) ஆகிய 17 பேருடைய மனுக்கள் நேற்று முன்தினம் காலையும்;

தம்பன் பாஸ்கரன் (கைதடி), பற்றிக் மேரிரவி (மத்தியூஸ் வீதி), செல்லையா பரமநாதன் (அரியாலை), நாகமுத்து செல்வரட்ணம் (அரியாலை), செல்லத்துரை குமார் (குருநகர்), பரமு சந்திரசேகரம் (கொய்யாத்தோட்டம்), ஆறுமுகம் சிவாஜினி (கொழும்புத்துறை), தேவதாஸ் சுரேஸ்குமார் (மத்தியூஸ் வீதி) ஆகிய எட்டுப் பேருடைய மனுக்கள் நேற்று முன்தினம் மாலையும் தாக்கல் செய்யப்பட்டன.

இம் மனுக்கள் தொடர்பான விசாரணைகள் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசாவினால் மேற்கொள்ளப்பட்ட போது அரச தரப்பினர் தமது இறுதி ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் கோரினர்.

இதனை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 22ம்,23ம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார்.

இவ் வழக்கு விசாரணையின் போது அரச தரப்பின் சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமியும், படையினர் தரப்பில் சட்டத்தரணி கப்டன் குறூப்பும் ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை காணாமல் போனோர் தொடர்பான 23 ஆட்கொணர்வு மனுக்கள் கடந்த ஜனவரி மாதம் தாக்கல் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## விபத்தில் மாணவி மரணம் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கண்டி)

கண்டி நோவுட் நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

பெஞ்சன் கீழ்ப்பிரிவைச் சேர்ந்தவரும் நோவுட் தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் 11 வயதுச் சிறுமியே இவ் பஸ் விபத்தில் உயிரிழந்துள்ளார். சிறுமி பாதையைக் கடக்க முற்பட்டபோது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினை அடுத்து விபத்துக்குள்ளான தனியார் பஸ் பொதும்க்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அப்பிரதேச மக்கள் தனியார் பஸ் சங்கத்திற்கு எதிரான எதிர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நேற்று நடத்தினர்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முகமாக நோவுட் நகரம் முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ்வீதியூடாக செல்லும் பஸ் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (தி-61)

## காயமடைந்த மீனவர்களைக் காப்பாற்ற படையினர் விரைந்து செயற்பட்டனர்

### பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விளக்கம்

(பலாலி)

கடந்த திங்களன்று வடமராட்சிக் கடலில் வைத்து இந்திய மீனவர்களால் கூரிய ஆயுதங்களால் தாககப்பட்டு படுகாயமடைந்த வடமராட்சிப் பிரதேச மீனவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் விடயத்தில், படைத்தரபபினர் தாமதப்போக்கைக் கடைப்பிடித்ததாக வெளியான செய்தியை பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக கப்டன் பி. கேஏபிதிஜூ கையொப்பமிட்டு அனுபபி வைத்துள்ள செய்திக்குறிப்பில்,

காயமடைந்தவர்களை ஏற்றிக் கொண்டு மாலை 6.30மணிக்கே மீனவர்கள் கரையை வந்தடைந்துள்ளதாக மேற்கண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதுடன், காயமடைந்த மீனவாகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல படையினர் தடையாக செயல்படவில்லை என்றும், காயமடைந்த மீனவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல பாதுகாப்பு படையினர் மீனவர்களுக்கு உதவினார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



### சாயி அருளமுதம்

மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிக்க நீங்கள் திட்டமிட்டால் நீங்களே மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். 'மற்றவர்கள்' என்பது யார்? கடவுளே மனிதஉருவில் வந்திருக்கும் போது நீங்கள் காணும் எல்லா மனிதருமே அவருடைய மகிமை, பிரகாசம் ஆகியவற்றின் அங்கங்களாவர். ஈஸ்வர ஸர்வபு,தானாம் ஹ்ருதேஸே அர்ஜ"ன திஷ்டதி ஓ-அர்ஜுனா எல்லா ஜீவராசிகளுடைய இதயப் பிரதேசத்தில் இறைவன் வதிகிறார் என கீதையில் பகவான் அருளிச் செய்துள்ளார்.

## மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று மு.ப. 10.00 மணிக்கு அதிபர் நா.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவகக் கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எ.புவனேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.இரத்தினசிங்கம், வணபிதா. ஜே.ஏ. ஜேசுதாஸ் அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-75)

## 600 குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிக் கோட்ட தேசிய எழுசசிப் பேரவையின் மரநடுகைத் திட்டம், நேற்று முன்தினம் சாவகச்சேரி, கல்வயல் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் 600 குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த மரநடுகை நிகழ்வில், சிறப்புக் கருத்துரைகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் வழங்கினர். (உ)

## தவக்கால சிந்தனை-02

உரோமையர் கலிலேயர்களை அவர்கள் அறைப்பட வேண்டிய சிலுவையைத் தோளில் சுமந்து கொண்டு அவர்கள் கொல்லப்படும் இடம்வரை நடக்கச் செய்தார்கள். இயேசு தன்னைப் பின்செல்ல விரும்புபவன் தன் சிலுவையைச் சுமந்து வரட்டும் என்றபோது, இறப்பின் எல்லை வரை கலிலேயரைப் போல செல்லவேண்டும் என்பதை நன்கு புரிந்து கொண்டார்கள். வெகு சிலர் பணத்துக்காக உயிரை விட முன்வருகிறார்கள். இன்னும் சிலர் தான் விரும்பும் தலைவருக்காக பெரும்பாலோர் வாழ்வு தரும், விடுதலை தரும் கொள்கைக்காக உயிரைக் கையளிக்க முன்வருகின்றனர். சாவுதான் மனிதனுக்கு எல்லாவற்றையும் விட பெரிய பயம். சாவு முடிவு அல்ல. அதைத்தாண்டி வாழ்வு உண்டு எனும் கிறிஸ்துவ விசுவாசம் சாவோம் என்ற பயத்தை தவிடுபொடியாக்குகிறது. எனவேதான் நம் கொலையின் கருவியாகிய சிலுவையை நாமே சுமந்து செல்ல முடிகிறது. இன்று இந்தியாவில் கிறிஸ்தவராக வாழ்வதில் நாம் பல தியாகங்களை ஏற்க வேண்டியுள்ளது. கிறிஸ்தவர்கள் என்கிற ஒரே காரணத்துக்காக வேலை மற்றும் படிப்பு வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. அடிப்படை மதவாதிகள் கிறிஸ்தவர்களுக்கு உயிர், பொருள் சேதங்களை உருவாக்குகின்றனர். இறைவா! எம்மை எதிர்நோக்கும் சிலுவைகளை சுமந்து கொண்டு உம்மைப் பின்தொடர அருள்தாரும்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

# தேர்தல் வன்முறைகளை அடியோடு ஒழிப்போம்

## விமலரத்ன தேரர் உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது ஏற்படக் கூடிய வன்முறைகளை அடியோடு ஒழிப்பதே தமது கவுன்சிலின் முக்கிய நோக்கம் என்று, தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் தலைவரான வண.பெல்லன்வில விமலரத் தினதேரர் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைசசில் நடைபெற்ற இக்கவுன்சிலின் ஆரம்பநாள் விழாவில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

தேர்தல் வன்முறைகளினால் பெரும்பாலான பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். இக்காலத்தில் வெற்றிபெறும் அரசியல் கட்சியினர் ஏனையவர்களைத் தாக்குவது பொதுவாகி விட்டது. இவற்றைத் தடுப்பதில் எமது கவுன்சில் பொறுப்புடன் செயற்படும் என்றார்.

உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என் ஜுனைட் பேசுகையில்: இக் கவுன்சில் தேர்தல் காலங்களில் மட்டும் அன்றி எல்லாக்காலங்களிலும் செயற்படும் என்றார். கவுன்சிலின் உறுப்பினர்களாக வண.மடகொட, சுமனதிஸ்ஸ தேரர், இந்து மதகுரு, பிரம்மஸ்ரீ எஸ்.குகானந்தசர்மா, அதி.வண.ஒஸ்வோல்ட் கோமிஸ், தென்மாகாண ஆளுநர் கிங்ஸ்லி ரி.விக்கிரமரட்ண, மொண்டி கோபல்லாவ, பொலிஸ்மா அதிபர் இந்திரா.டி.சில்வா, சர்வோதயத் தலைவர் ஆணரியரட்ண, கொட்பெறி குணத்திலக போன்றோர் உள்ளடங்குவர். (இ)

# மூதாட்டிக்கும் மகனுக்கும் வீடு புகுந்து வாள்வெட்டு

## பருத்தித்துறை அல்வாயில் சம்பவம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் மூதாட்டியும் அவரது மகனும் இளைஞர் குழு ஒன்றினால் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி பரஞ்சோதியம்மா (வயது 80), கதிர்காமத்தம்பி சிறிஸ்கந்தராசா (வயது 52) ஆகிய இருவருமே வாள்வெட்டுக்கு இலக்கானவர்களாவர்.

சம்பவ தினத்தன்று இரவு 11 மணியளவில் வாள்கள், கொட்டன்கள் சகிதம் வீட்டுக்குள் புகுந்த இளைஞர்கள் குழு மூதாட்டியையும், அவரது மகனையும் வெட்டியும், தாக்கியும் அட்டகாசம் புரிந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் உடனடியாக பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். தனிப்பட்ட பகைமையே மேற்படி சம்பவத்துக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-52,35,3)

# தாக்குதலைக் கண்டித்துக் கண்டனக் கூட்டம்

(பருத்தித்துறை)

இந்திய மீனவர்களால் பருத்தித்துறை மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்றுக் கண்டனக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

பருத்தித்துறை சுப்பர்மடம் புனித சவேரியார் ஆலய முன்றலில் மு.ப.11.00 மணியளவில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் வடமராட்சி வடக்கு மீனவர் சமாசச் செயலாளர் சூரியகுமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சிவமகாராசா, கடற்றொழில் திணைக்கள யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஜோசப, மனித உரிமை ஆணைக்குழுப் பிரதிநிதி, கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி, மற்றும் கடற்றொழிலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் மகஜர்களும் கையளிக்கப்பட்டன. (த-52)

# கலந்துரையாடல்

(பொன்னாலை)

“நிக்கொட்” நிறுவனத் திட்டத்தால் பயன்பெறுகின்ற கடற்றொழிலாளர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நிக்கொட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளதால், மேற்படி திட்டத்தில் பயன்பெறுகின்ற 18 சங்கங்களின் நிர்வாகிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-49)

# மெய்வல்லுநர்போட்டி

(கோப்பாய்)

ஊரெழு கணேச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்பிரதேச செயலக பிரதேச உதவிச் செயலாளர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் கலந்துகொள்ளவுள்ளார். (ச-79)

# 5 இறுதிப் போட்டிகளில் யாழ்.அணி இன்று மோதும்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் 5 இறுதிப் போட்டிகளில் யாழ் அணிஇன்று பங்குபற்றவுள்ளது.

கபடி ஆண்கள், தாச்சி ஆண்கள், பெண்கள் வலைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் யாழ் அணி இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளது.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள அம்பாறை மட்டக்களப்பு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் அரையிறுதிப் போட்டியில் வெல்லும் அணி நாளை யாழ். அணியுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. (ச-68)

# தென்னாபிரிக்காவை நியூசிலாந்து 6 விக்கெற்றுக்களால் வென்றது

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த 4ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நியூஸிலாந்து அணி 6 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்ரீவன் பிளமிங் தென்னாபிரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெற்றுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணி சார்பில் றூடல்வ் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் நிக்கி போயே 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் ஒறாம் 3 விக்கெற்றினைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுபெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 49 ஓவர்களில 4 விக்கெற்றுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பில் மார்சல் 74 ஓட்டங்களையும் ஸ்ரைறிஸ் 69 ஓட்டங்களையும் பிளமிங் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்கா அணி சார்பில் நிதிநி 2 விக்கெற்றுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றதால் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட இத்தொடரை 3:1 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி வென்றுள்ளது. (த-121)

# இந்திய மீனவர்களின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டமைக்காகக் கைதுசெய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களுக்கெதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மேற்படி மீனவர்களின் விடுதலை குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதனாலும் தமிழக மீனவர் சங்கம் மீனவர்கள் சார்பாக சட்டத்தரணி ஒருவரை நியமிக்கக் கால அவகாசம் கேட்டிருப்பதனாலும் வழக்கை ஒத்திவைக்குமாறு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்று அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிபதி இவ்ஒத்திவைப்புக் காலத்தில் மீனவர்கள் எதுவித போராட்டத்திலும் ஈடுபடக்கூடாது என்றும் உத்தரவிட்டார். (இ)

# வாஷிங்டன்...

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பற்றியும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்குச் சாவடிகள் அமைப்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இச் சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன்;

மக்களுடைய உரிமைகள், விருப்பங்களுக்கு இடமளிப்பது அவசியமாகும். எனவே இதற்கான சாத்தியப்பாடான சூழலை தோற்றுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இது விடயமாக நாங்கள் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசியிருக்கின்றோம். ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடனும் இது குறித்து ஆராயவுள்ளோம். சந்திப்பு மிகவும் ஆக்க பூர்வமாக இருந்தது. இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளில் தேர்தல் வாக்குச் சாவடிகள் அமைப்பது குறித்தும் ஆராய்ந்தோம்.

இவ்வாறு சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் வாஷிங்டனில் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து நோர்வேத் தூதுவர் தமிழ்ச்செல்வனிடம் எடுத்துக் கூறினார். (த)

# தமிழ்...

களினால் அடிமட்ட மக்கள் எதுவித அபிவிருத்திகளையும் பெறவில்லை.

இலங்கையில் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் முதலாளிவர்க்கத்தினருக்கே சாதகமானதாக உள்ளன. ஒரு நாட்டின் அரசாங்கம் என்பது நாட்டின் சகல சிவில் சமூகத்தினரதும் கொள்கைகளையும் பிரச்சினைகளையும் அனுசரித்துப் போக வேண்டும். ஆனால் அத்தகைய அமைப்பு இங்கில்லாததனாலேயே தீர்க்க முடியாத பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதைவிட கடந்த 20ஆண்டு கால யுத்தத்தினால் வடபகுதியில் கடல், விவசாய, கல்வி வளங்கள் சிதைவடைந்து விட்டன. எனவே இத்தகைய பேரழிவுகளில் இருந்து சமூகம் மீள்வதற்கு நல்லதொரு அரசாங்கம் இலங்கைக்கு தேவை எனவும் குறிப்பிட்டார். (உ-16,3)

# வழிகாட்டல் செயலமர்வு

(பொன்னாலை)

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்டு வரும் வழிகாட்டல் செயலமர்வு இன்று வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்வு நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-49)

# நாளை வெள்ளிக்கிழமை பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வலியுறுத்தி சுப்லி.ஃ.ஜமாத் அமைப்பைச் சேர்ந்த மர்லின் தலைமையிலான குழுவினர் பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை யாழ்.ஜும்மா பள்ளிவாசலில் இருந்து யாழ்.நயினாதீவு நோக்கி இப்பாத யாத்திரை இடம்பெறும். (ந)

யாழ்மண்ணிலேயே முதன்முறையாக...



இந்தியாவின் praba’s Institute of health care management நிறுவனங்களின் இயக்குநரும் தியாகராஜர் Poly Tecnic மற்றும் காமராஜர் பல்கலைக்கழகத்தினதும் (மதுரை) விரிவுரையாளருமான

திருமதி பிரபாரெட்டி (M.A., M.S)

அவர்களாலும் அவரது குழுவினராலும் இரண்டுநாள் அழகுக்கலை பயிற்சி வகுப்புக்களையும் அதனைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கவுள்ளார்கள்.

இப்பயிற்சி வகுப்பினை முன்னிட்டு 29.02.2004 ஞாயிறு காலை 9:30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில்

இலவச கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: 071 2346781
024 589743

முக்கிய குறிப்பு: மேற்படி பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றும் அனைவருக்கும் திருமதி பிரபாரெட்டி அவர்களினால் சான்றிதழ் உடன் வழங்கப்படும்.

திங்கள், வியாழன் தோறும் உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

கருத்துச் சங்கமம் – 02

விடயம் :

தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களை - சமூகப் பெறுமானங்களை பாதுகாப்பதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தவறிவிட்டது - தவறவில்லை

உங்கள் வாதப் பிரதிவாதங்களை விரைவாக அனுப்பிவையுங்கள்

விவாத அரங்கிற்கு மேற்படி விடயத்தை முன்வைத்தவர்
விந்தகன்
யாழ்ப்பாணம்

வாசகர்களே நீங்களும் விவாத அரங்கிற்கு விடயப் பொருளை முன்வைக்க முடியும்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.